பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 05 வியாழக்கிழமை (19.06.2008)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 204

## மஹிந்த அரசை வழிக்குக் கொண்டுவர

# பொருளாதாரத் தடை விதித்து

# ஜி.பி.எஸ்.+ சலுகையை நீக்குக!

### ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 19

**இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தவறுகளில் இருந்து திருந்திக் கொள்வதற்கு - இது விடயத்தில் மஹிந்த அரசை வழிக்குக் கொண்டு வருவதற்கு - பொருளாதாரத் தடைகளை விதியுங்கள். ஜி.பி.எஸ்.+ வரிச் சலுகையை ரத்துச்செய்து பாடம் புகட்டுங்கள்.**

கொழும்பு வந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இதுவரை சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுக்கவில்லை. இனியும் இந்த அரசு கேட்கப்போவதில்லை. எனவே, இலங்கை அரசிற்கு எதிராக - அவர்கள் புரியும்படியாக - ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை மீது பொருளாதாரத்தடைகளை விதித்து - ஜி.பி.எஸ். பிளஸ் வரிச் சலு கையை ரத்துச் செய்வதன் மூலம் அரசு மனித உரிமை மீறல் தொடர் பான தவறுகளிலிருந்து திருந்தி க்கொள்ள வழி செய்யலாம்- என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் சுட்டிக்காட்டினர்.

ஐரோப்பிய ஒன்றிய மனித உரிமைகளுக்கான தூதுக்குழுவினரை நேரில் சந் தித்து தாங்கள் இந்தக் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் பீரங்கித் தாக்குதலில் வவுனியாவில் 4 சிப்பாய்கள் பலி!

கொழும்பு, ஜூன் 19

வவுனியா, இராணுவ முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆட்லறி மற்றும்மோட்டார் ஷெல் தாக்குதல்களில் இரணுவத்தினர் நால்வரும், இராணுவத் தளத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரும் உயிரிழந்தனர். மற்றும் மூவர் படுகாயமடைந்தனர் என்று படைத்தரப்பினால் கூறப்பட்டது.

கோயமோட்டைப் பகுதியில் நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகங்களை அரச, விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் நிறுவவேண்டும்

#### கொழும்பு வந்த ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் மனோ கணேசன் எம்.பி. வேண்டுகோள்

கொழும்பு,ஜூன்19

''ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகம் கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டு, அதன்கிளை அலுவலகங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படல் வேண்டும். அதேசமயம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்திலும் இந்தக் கிளை அலுவலகம் நிறுவப் படவேண்டும்''

-இவ்வாறு மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் எம்.பி, கொழும்பு வந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகளுக்கான தூதுக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்தார். (12 ஆம் பக்கம் பார்கக)

### ஊரடங்கு வதந்தியால் குடாநாட்டில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

குடாநாட்டில் வழமையாக இரவு 7 மணி முதல் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் நேற்று முற்கூட்டியே பிற்பகல் 2 மணிமுதல் அமுலுக்குக் கொண்டுவரப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**தரம் - 5 மாணவருக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சி வினாப்பத்திரம்**

7 ஆம் பக்கத்தில்

### 'O'நெக்கட்டிவ் இரத்தம் அவசரம்

யாழ்ப்பாணம் ஜூன் 19

யாழ். ஆஸ்பத்திரி இரத்தவங்கிக்கு 'O' நெக்கட்டிவ் இரத்தம் அவசரமாகத் தேவையாக உள்ளதாக இரத்தவங்கி பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த வகை இரத்தம் உடையவர்கள் உடன் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு அவசர கோரிக்கையை அவர் விடுத்துள்ளார். (அ-1)

### இராணுவத் தளபதி பலாலிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவ உயர் அதிகாரிகள் சகிதம் நேற்றுமுன்தினம் பலாலிக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

#### கொழும்பில் ஒகஸ்டில் 'சார்க்' மாநாடு

### பாதுகாப்பு நிலைமையின் அடிப்படையிலேயே இந்தியப் பிரதமரின் வருகை குறித்துத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 19

அடுத்த மாதம் இறுதியிலும், ஒகஸ்ட் முதல் வாரத்திலும் 'சார்க்' உச்சிமாநாட்டைக் கொழும்பில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாகச் செய்யப்பட்டு வந்தாலும், தென்னிலங்கையில் பாதுகாப்பு நிலைமை சீரடைந்தால் மட்டுமே அந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் இலங்கை வருவார் என்று இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயத்தில் புதுடில்லியின் நிலைப்பாடு, கொழும்பு நிர்வாகத்துக்கு உத்தியோகப் பற்றற்ற முறையில் ஏற்கனவே கோடி காட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

தென்னிலங்கையில் தொடர்ந்து குண்டுகள் வெடித்து, சீர்கெட்ட நிலைமை நீடிக்குமானால் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டார் என்றும் புது டில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

''பாதுகாப்பு நிலைமையே எல்லாவற்றை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு முன் ஆயுத ஒப்படைப்பை வலியுறுத்தும் அரசுத் தரப்பின் நிபந்தனை புலிகளால் நிராகரிப்பு

## யுத்தத்தில் தங்களால் வெல்ல முடியும் என்கிறார் நடேசன்

கொழும்பு, ஜூன் 19

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு அல்லது செயற்படாமல் வைத்துவிட்டு பேச்சுக்கு வருமாறு இலங்கை அரசு முன்வைத்த வேண்டுகோளை விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா. நடேசன் அடியோடு நிராகரித்துள்ளார். அரச படையினருடனான யுத்தத்தில் இன்னும் தங்களால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

'ரொய்ட்டர்' செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள மின்னஞ்சல் பேட்டியிலேயே அவர் இவற்றைத் தெரிவித்துள்ளார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஆயுதங்களை ஒப்படைப்பது பேச்சுகளின் போது பேரம் பேசும் சக்தியைப் பலவீனப்படுத்தும்.

அதிகார சமநிலையையும் சம அந்தஸ்தையும் குழப்பும் எந்த அணுகுமுறையும், விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெறக் கூடிய எந்தப் பேச்சுக்கும் எதிர்மறையான விளைவைத் தருவதாகவே அமையும். அதிகார சமநிலையும் சம அந்தஸ்தும் அர்த்த பூர்வமான பேச்சுகளுக்கு மிக முக்கியமானவை.

விடுதலைப் புலிகள் தற்போது த ...

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாவட்ட தமிழ்த்தினப் போட்டி யாழ்.இந்துவில் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.மாவட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் எழுத்தாக்கப்போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

வலய மட்டத்தில் முதலிடம் பெற்றவர்களை குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளிக்குமாறு வலிகாமம் கல்வி வலயப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

இந்தப் போட்டிகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (1)


### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் ஆ.சஞ்சீவன்
அவர்களின் அன்புத் தந்தை
**அ.ஆனந்தஜெயந்திரன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். (75499) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

### மாதரசியின் மறைவுக்கு மனம் நெகிழ்ந்த அஞ்சலி



சைவத்துக்கும் தமிழுக்கும் அர்ப்பணிப்போடு செயலாற்றியவரும் எமது ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியவருமான
சிவத்தமிழ்ச்செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.
ம.மகேந்திரசர்மா - ஆதீன கர்த்தா
வரஸ்தலம் கற்பகவிநாயகர் தேவஸ்தானம்,
பன்னாலை, தெல்லிப்பழை. (75508)

### கண்ணீர்க் காணிக்கைகள்



துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி
**அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி**
தமிழுக்கும் சைவத்திற்கும் அரும் பணியாற்றி இறைபதம் அடைந்த செய்திகேட்டு தாங்கொணாத் துயர் அடைகின்றோம். அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
உரிமையாளர் - குகன் ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.
(ச/553414)

### கண்ணீர் அஞ்சலி

அமரர்
**கந்தையா தளையசிங்கம்**



உள்ளம் உறைந்து உருகித் திரிந்தே
உருகும் தேனுளம் கொண்டார்
இறையடி ஏகிய தெண்ணி

பண்பும் அன்பும் பதமாய் உரைத்து
அறிவுச்சுடரேற்றி செல்வங்களை
உலகமன்றில் உயரச்செய்து
உத்தமராய் நிறுத்தி விதைதனில்
விளைச்சல் காணாது விண்ணது சென்றீரோ

நண்பனைக் காணவரும் எம் உள்ளத்தில்
நீர் வளர்த்து நீங்கா இடம்பிடித்து
சென்றுவிட்டீரே
கடமையில் கரைபுரளா கண்ணிய
உள்ளம் உமைக் காணாது துடிக்கும்
உறவுகளுக்கு எம் ஆறுதல்
சிறுதுணை ஆகட்டும்

மலர்வு: 05.11.1948
உதிர்வு: 16.06.2008

நண்பர்கள் - 2007 உயர்தர மாணவர்கள்


## கொக்குவில் மேற்கில் மோட்டார் சைக்கிளால் சில மணிநேரம் பதற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

கொக்குவில் ,மேற்கு, முதலிகோயிலுக்கு முன்னாலுள்ள பற்றைக்கருகில் அநாதரவாகக் கிடந்த மோட்டார் சைக்கிளால் அப்பகுதியில் சில மணிநேரம் பதற்றம் நிலவியது.

நேற்று முன்தினம் இரவு குறிப்பிட்ட இடத்தில் மோட்டார் சைக்கிளின் நடமாட்டம் காணப்பட்டதாகப் பிரதேச மக்களால் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை பற்றைக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று அநாதரவாகக் காணப்பட்டதும் அப்பகுதி மக்களிடம் பதற்றம் தொற்றியது.

காலை 8 மணியளவில் வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரிடம் பிரதேச மக்கள் தகவல் தெரிவித்ததையடுத்து படையினர் அவ்விடத்திற்கு வந்து மோட்டார் சைக்கிளை கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

## ஊரெழுகணேசாவில் முத்தமிழ் விழா நாளை

கோப்பாய்,ஜூன்19

ஊரெழு கணேச வித்தியாசாலையின் நுழைவாயில் பெயர் வளைவு திறப்பு விழாவும் முத்தமிழ் விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும், சிறப்பு விருந்தினராக யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிமனை பதில் பொறியியலாளர் த.இரவீந்திரதாசும் கலந்து கொள்வார்கள். (202-72)

## மென்பந்தாட்டம்

மந்திகை,ஜூன்19

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் 15ஆவது ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்டுவரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் சுற்றின் இன்றைய ஆட்டத்தில் பி.ப. 3 மணிக்கு அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புலோலி குரும்பகட்டி உதய சூரியன் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

நாளை பிற்பகல் 3 மணிக்கு துன்னாலை ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. (1-218)

## தேசிய கல்வி நிறுவக ஒன்று கூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்19

தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ். பிராந்தியத்தின் ஏற்பாட்டில்பிரிவுபசார ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஆசிரிய மாணவன் நா.மகேந்திரராசா தலைமையில் நடை பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (1)


குகமயம்
### ஷஷ்டியப்த பூர்த்தி விழா அழைப்பு



எமது தந்தையாராகிய
**நாகேந்திரக் குருக்கள்**
(நல்லூர் தாச சர்மா)
அவர்களுக்கு அறுபதாவது அகவை நிறைவெய்வதனை முன்னிட்டு இன்று (19.06.2008) வியாழக்கிழமை சித்தயோகமும் பிரதமைத் திதியும் மூல நட்ஷத்திரமும் கூடிய நண்பகல் 12 மணிக்கு வரும் சுபவேளையில் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினைக் கொண்டாடுகின்றோம்.

இடம்: மாதனை முருகன் கோயில் கொக்குவில் கிழக்கு.
(இந்த அழைப்பினை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்).

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(75503)

### 25 ஆவது ஆண்டை நிறைவுசெய்யும் (வெள்ளிவிழா) பெரதேனியா பல் சிகிச்சை மூக்குக்கண்ணாடி நிறுவனத்தினரின்

★ இலவச கண் பரிசோதனையும்
★ பல் பற்றிய ஆலோசனைகளும்
எமது வெள்ளி விழாவை முன்னிட்டு இலவச கண், பல் பற்றி ஆலோசனை வழங்கப்படும்.
★ரூபா 600 க்கு அழகிய பிறேமில் கண்ணாடி
★கற்றாக், தலையிடி போன்றவற்றிற்கு அரைக் கட்டணத்திலும்
★பல் கட்டுதல், கிளிப்போடுதல், பல் மிதப்பைத் தடுப்பதற்கான ORAL SCREEN அனைத்தும் அரைக்கட்டணத்தில் மட்டும்
இடம்: பெரதேனியா பல்சிகிச்சை மூக்குக் கண்ணாடி அகம்
494, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7655
காலம்: 22.06.2008 (ஞாயிற்றுக்கிழமை) மட்டும்
நேரம்: 9.00 - 3.00 முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

### ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்

விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்

### சவாரிப் போட்டி

தென்கோவையூர் விளையாட்டரங்க வீதி,
அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய
தேர்த்திருப்பணி நிதிக்காக நடத்தப்படும் மாபெரும்
**மாட்டுவண்டில் சவாரிப்போட்டி**
இடம்: நீர்வேலி சவாரித்திடல்
காலம்: 22.06.2008 ஞாயிறு
நேரம்: பிற்பகல் ஒரு மணி
முதல் மூன்று பரிசில்களும் ''தங்கப் பதக்கங்கள்''.
அனைவரும் வாரீர்...! ஆதரவு தாரீர்...!
(75502) தேர்த்திருப்பணிச் சபையினர்.

### இதய அஞ்சலி



சைவப் பணியுடன் தமிழையும் வளர்த்த
சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய,
அறங்காவல் சபையினர், பொதுமக்கள்,
அனலைதீவு.
(75513)

### கண்ணீர் அஞ்சலி



சைவத்தமிழ் உலகின் ஒளிவிளக்காக விளங்கி வழிகாட்டிய
அன்னை சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உசன் இந்து இளைஞர் மன்றம்.
உசன், மிருசுவில்.

### கலாலயா

பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.
மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

கடந்த மாதம் ஆரம்பமான புதிய வகுப்புக்களில் சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை பிரிவுகளுக்கு பின்வரும் பயிற்சிகளுக்கு மேலும் மாணவிகள் உடன் அனுமதிக்கப்படவுள்ளனர்.
❁ கேக் ஐசிங் ❁ உணவு தயாரித்தல் ❁ கூந்தல் அலங்காரம்
(பயிற்சிக்காலம் 2 மாதங்கள்)
மேலும் விபரங்களை வியாழன் வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.
பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணியினருக்குத் தெரியாமலே சட்டமூலத்தில் திருத்தங்கள் ஏன்?

## சாட்சிகளுக்கான பாதுகாப்பு சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் எதிர்க்கட்சிகள்

கொழும்பு, ஜூன் 19

எதிர்கட்சியினருக்கு தெரிவிக்கப்பட்டாமலே சட்ட மூலத்தின் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. திருத்தங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் இது இன்னுமொரு சட்டமூலமாகவே தோன்றுகின்றது.

குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோரையும் சாட்சியமளிப்போரையும் பாதுகாப்பதற்கான சட்ட மூலம் மீதான விவாதத்தின் போது நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும் போது எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அந்த விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசிய போது குறிப்பிட்டதாவது:

இந்தச் சட்டமூலம் மிக முக்கியமான ஒன்று. எப்போதோ கொண்டு வரப்பட்டிருக்க வேண்டிய இந்தச் சட்டமூலம் இப்போது தான் அவசர அவசரமாக நாடாளுமன்றிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

இந்தச் சட்டமூலத்தை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், எம்மிடம் தெரிவிக்கப்படாமல் அதிக திருத்தங்கள் இச்சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திருத்தங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது அது இன்னொரு சட்டமூலமாகத் தெரிகிறது.

மிக முக்கியமான இந்தச் சட்டமூலத்தில் உள்ள இந்தத் திருத்தங்கள் பற்றிக் கலந்தாலோசிக்காது இதைச் சட்டமாக்க இடமளிக்க முடியாது.

இச்சட்டமூலத்தை இன்றே எடுக்கவேண்டும் என்று அரசுதான் அவசரப்படுகிறது. ஆனால், இவ்வளவு காலமும் அரசு அமைதியாகத்தான் இருந்தது.

இந்தத் திருத்தங்களில் உள்ள பல வாசகங்கள் பாரதூரமானவையாகும். இவை மாற்றப்படாமல் இதைச் சட்டமாக்க அனுமதிக்க முடியாது. - என்றார்.

**சம்பந்தன் கருத்து**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறுகையில்-

எப்போதோ கொண்டுவரவேண்டிய இந்தச் சட்டமூலத்தை இன்று அவசர அவசரமாகக் கொண்டுவந்து இதைச் சட்டமாக்க அரசு முயற்சிக்கிறது.

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் மூதூரில் 17 தொண்டு நிறுவன ஊழியர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுடன் தொடர்புடைய ஒன்றுதான் இந்தச் சட்டமூலம்.

எல்லோரும் ஏற்கும் விதத்தில் - மக்களுக்குப் பிரயோசனமான விதத்தில் - அரசு இந்தச் சட்டமூலத்தைக் கொண்டு வரவில்லை. இதை அரசு மிகவும் குழப்பியடித்துள்ளது - என்றார்.

**சமரசிங்க சமரசம்**

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியவை வருமாறு:-

இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட வேணடியதன் அவசியம் நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

இதைக் கொண்டுவருவதற்காக 2004 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் காரணமாகவே இப்போது இது கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கு நீதிமன்றமும் பொருத்தமான தீர்ப்பை வழங்கியுள்ளது. இச் சட்டமூலத்தில் உள்ள திருத்தங்கள் பற்றி நாம் பின்பு கலந்தாலோசித்து பொருத்தமான திருத்தங்களை இச்சட்டமூலத்தில் உள்ளடக்கலாம். ஆனால், இப்போது இச்சட்டமூலம் என்னால் சமர்பிக்கப்பட்டு விட்டதால் இது மீதான விவாதத்தை மாத்திரம் நடத்த எதிர்கட்சியின் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார்.

இருப்பினும் எதிர்கட்சி இக்கோரிகைக்கு வளைந்து கொடுக்கவில்லை. தம்முடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்பே இச்சட்டமூலம் விவாதிக்கப்பட வேண்டும் என்று ஐ. தே. கட்சி உறுதியாக நின்றது.

இந்நிலையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் முன்னைய அரசியல் தலைவர்கள் அறுவரின் உருவப்படங்களை திரைநீக்கம் செய்து வைப்பதற்காக நண்பகல் 11.20 மணியளவில் சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நேரத்தில் கட்சித் தலைவர்கள் கூடி இது தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை எடுத்தனர். (உ-07)

## அருணகிரிநாத சுவாமி விழா

யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருணகிரிநாத சுவாமி விழா நடைபெற வுள்ளது.

இந் நிகழ்வில் 'ஆறு முகமான பொருள்' என்னும் தலைப்பில் வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதனின் சொற்பொழிவு, திருப்புகழிசை, விரிவுரையாளர் அ.குமாரவேலின் பெரியபுராணம் சொற்பொழிவு என்பன இடம் பெறும். (202)

## மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்தின் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கலந்து கொள்வார். (202)

## ஒருங்கிணைப்பு கூட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. (202-51)

# சர்வதேச சமூகத்தை மீண்டும் ஏமாற்றவே சாட்சிகளைப் பாதுகாக்கின்ற சட்டமூலம்

## நாடாளுமன்றில் ஸ்ரீகாந்தா எம்.பி. காட்டம்

கொழும்பு, ஜூன் 19

சர்வதேச சமூகத்தை மீண்டும் மீண்டும் ஏமாற்றுவதற்காகவே, குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் பாதுகாப்பும் நிவாரணமும் வழங்கும் சட்டமூலம் தற்போது அரசினால் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான என்.ஸ்ரீகாந்தா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

இவ்வாறான சட்டமூலங்களால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று கூறிய அவர் யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதுதான் சிறந்த வழி என்றும் சொன்னார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற - குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாக்கும் சட்டமூலம் மீதான - விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

15 பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைத்தார்.

அந்தக்குழு 06 மாதங்களாக விசாரணை எதையும் செய்யாது காலத்தை இழுத்தடித்து பின்பு விசாரணையைத் தொடங்கியது.

இதன் விசாரணையைக் கண்காணிப்பதற்காக சர்வதேச பிரமுகர் குழுவொன்று வரவழைக்கப்பட்டு இப்போது அது இலங்கையை விட்டு வெளியேறிவிட்டது.

இதனைத் தொடர்ந்துதான் இன்று சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

இப்போது தமிழ் மக்கள் கடத்தப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அரசுடன் சேர்ந்து இயங்கும் சட்ட விரோத ஆயுததாரிகள்தான் இதற்குக் காரணம்.

இப்படியான நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் பாதுகாப்புக் கொடுக்கத்தான் இந்தச்சட்டமூலத்தைக் கொண்டு வந்திருப்பதாக அரசு தெரிவிக்கின்றது. இதை நினைத்து சிரிப்பதா அல்லது அழுவதாஎன்று தெரியவில்லை.



இந்த விடயத்தில் நாம் இந்த அரசை நம்பப்போவதில்லை. அரசு வன்முறை நடவடிக்கைககளை நிறுத்தப்போவ தில்லை.

இந்த நிலைமையை இல்லாதொழிக்க அரசு யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க முன்வரவேண்டும். (சி)

# இடம்பெயர்ந்தோர் பிரச்சினை குறித்து அந்த மக்களுடன் அமைச்சர் ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடகிழக்கின் தமிழ் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக நான் செயற்பட்டபோது குடாநாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்காக காணிகளை வழங்கி வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தபோது தூர நோக்கற்றும் மக்கள் நலன் சாராமலும் சிந்திக்கின்ற தமிழ் மக்களின் தலைவர்கள் எனத் தம்மைத் தாமே பலவந்தமாகக் கூறிக்கொண்டவர்கள் தீய சக்திகளுடன் இணைந்து இதனைத் தட்டிக்கழிக்கும் வகையில் பல்வேறு கருத்துக்களை மக்கள் மத்தியில் உலாவ விட்டனர். காலப்போக்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் மேற்படி முயற்சி கைவிடப்பட்டுப் போனது. இவ்வாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேற்படி முயற்சி வெற்றியளித்திருப்பின் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருபவர்களுக்கு குடாநாட்டில் இன்று சொந்தமாகக் காணியும் வீடுகளும் கிட்டியிருக்கும். நாளடைவில் சுமுகமானதொரு நிலை ஏற்பட்டதன் பின்னர் இவர்களது சொந்தஇருப்பிடங்களும் மேலதிகமாக இவர்களுக்கு கிடைத்திருக்கும்என்றும்மேலும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி, தையிட்டி, பலாலி, காங்கேசன் துறை, கலட்டி, வசந்தபுரம் போன்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து உடுவில் மற்றும் தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் வாழ்ந்து வரு கின்ற மக்கள் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தாவை சந்தித்து தாங்கள் முகங்கொடுத்து வருகின்ற பிரச்சினைகள்தொடர் பில் கோரிக்கைகளை முன்வைத்த போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித் துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவிடம் முன்வைத்தனர். இக்கோரிக்கைகள் தொடர்பில் உடனடி அவதானங்களைச் செலுத்திய அமைச்சர், உலருணவு நிவாரணம் வழங்குவதற்கான பணிப்புரையை யாழ்.அரச அதிபருக்கு வழங்கியதுடன் பொது மின்சாரம் வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து முடி வெடுப்பதாகவும் பொது வசதிகள் மற்றும் புதிய வீடுகள் தொடர்பில் மேலதிக காணி வசதிகள் செய்து கொடுப்பதற்கு உரிய காணிகள் தொடர்பில் இனங்கண்டு தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அப் பகுதி உதவி அரசாங்க அதிபருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் மழை காலத்திற்கு முன்பதாக இம்மக்களின் இருப்பிடங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சுயதொழில் முயற்சிகளுக்கான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (1)

## கிராம அலுவலர்களுக்கு முகாமைத்துவப் போட்டிகள்

கிராம அலுவலர்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் பிரதேச செயலக மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டம் ஆகிய ரீதியில் நடத்தப்படவுள்ளன. பிரதேச மட்டத்தில் நடத்தப்படும் போட்டிகளில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் முதலிடத்தைப் பெறுபவர் மாவட்ட மட்டப் போட்டிக்கு அனுப்பப்படுவர். மாவட்ட மட்டப் போட்டியில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் முதலிடம் பெறுபவர் தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்வர். (202-207)

## கோப்பாய் பிரதேச மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்19

கோப்பாயில் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களையும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களையும் கோப்பாய் லயன்ஸ் கழகம் கௌரவிக்கவுள்ளது.

கோப்பாய்கோட்டபாடசாலைகளிலும்கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் வேறு பாடசாலைகளிலும் கல்விகற்ற மேற்படி தகுதியுடைய மாணவர்களையும் தங்கள் விவரங்களை கழகத்தின் பிரதி மாவட்டச் செயலர் லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவிடம் (மெடி எயிட்ஸ் கிளினிக், பருத்தித்துறை வீதி, நல்லூர்) கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## புனிதமான செயல்களையே செய்வாயாக

கெட்டதைச் செய்தால் உமக்கு நல் லது விளையாது. நல்லதைச் செய்தால் கெட்டது விளையாது. வேப்பங்காயை வித்திட்டு, மாங்கனிகளை எதிர்பார்க்க லாமா? விதைக்குத் தகுந்த மரம்: மரத் துக்குத் தகுந்த பழம். பல எண்ணங்களை மனிதன் வளர்த்துக் கொள்கிறான். பல எதிர்பார்ப்புகளை மனதில் கொள்கிறான். அவை நிகழாத போது, மனம் தளர்கிறான். மனி தன் இது செய்ய வேண்டும். அது செய்ய வேண்டும்என்றெல்லாம்நினைத்து களைப்படைகிறான். முன்பு விதைத்த வினைகளின் விளைவாக, அவற்றின் பலனை அனுபவிக்க இப்போது நீ இங்கு இருக்கிறாய். முன்பு ஒரு வகையான விதைகளை நட்டோம். வேறு வகையான பழங்களை நாம் எவ்விதம் எதிர்பார்க்க இயலும்?

செய்யும் வினைகள் அனைத்தையும் கணக்கிட்டுநல்லவைகெட்டவைஇவற்றை வினை செய்தவாறே பிரம்மா உன் கழுத் தில் வினைப்பயன் என்ற மாலை (கண்ட மாலை) அணிவித்துஉன்னைஉலகுக்குஅனுப்புகிறார். பிறக்கும் போது யார் கழுத்திலும் மாலை இருப்பதில்லை.

**முத்துமாலையை அணிந்து பிறப்ப தில்லை**
**தங்கச்சங்கிலி போட்டுப் பிறப்ப தில்லை**
**வைர மாலையும் அலங்கரிப்ப தில்லை**
**இரத்தினங்களும் பதிக்கப்படுவ தில்லை**



ஆனால் வினைப்பயன் விளைவாக கண்டமாலையுண்டு. ஒவ்வொருவர் கழுத்திலும் இந்த மாலை உண்டு. ஆனால் இது பற்றி அவன் அறிந்து கொள்வதில்லை.

ஆகவே ஒவ்வொரு மனிதனும் புனித மான செயல்களையே புரிதல் வேண்டும். அப்போதுதான் அவனுக்குப் புனிதமான பலன்கள் கிடைக்கும்.

**சாயி சிந்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமங்கல நல்வாழ்த்துகள்



இன்று திருமண
பந்தத்தில்
இணையும்
புதுமணத்
தம்பதிகளை
சகல
செல்வங்களும்
பெற்று நீடூழி
வாழ
வாழ்த்துகின்றோம்.



திரு.த.தவச்செல்வம் நியூரிலா

யாழ்.மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

விளையாட்டுத்துறை முதல்வரும்
ஆசிரியர்களும்.

(75482)

## யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - 0643 இரண்டாம் பரிசு - 5025
மூன்றாம் பரிசு - 2483
ஆறுதல் பரிசுகள்: 2493, 2790, 0095, 4891, 0111, 0463, 2994, 4211, 2147, 5117

பழைய மாணவர் சங்கம்

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம் செல்வராஜ்



நல்லூர், செம்மணி வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு, விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம் செல்வராஜ் 17.06.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம் - இந்திராணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் யோகமலரின் அன்புக் கணவரும் ஜெயக்குமார் (பதுளை), பாஸ்கரன் (லண்டன்), வசந்தகுமார், கமல்ராஜ், மதனகுமார், ரமணகுமார் (மாணவன் - கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), போஜனா (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் றேகா (லண்டன்) வின் அன்பு மாமனும் கிருஸ்ணமூர்த்தி (இந்தியா), தமிழ்ச்செல்வி (நுவரெலியா), தனச்செல்வி (நுவரெலியா), கமலாம்பிகை (நுவரெலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பற்குணநாதன் (கனடா), இராசமலர் (மன்னார்), கருணாமூர்த்தி (கனடா), தங்கமலர் (லண்டன்), மகேஸ்ஆனந்தன், புஸ்பமலர் (கனடா), யோகலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2008) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (75495)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
(குடும்பத்தினர்).

## குணரட்ணம் புஸ்பநாயகி

(வன்கூவர், கனடா)



வசாவிளான், உத்தரிய மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பத்தாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் புஸ்பநாயகி அவர்கள் வன்கூவர், கனடாவில் 16.06.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பிலிப்புப்பிள்ளை பொன்னையா-அன்னம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற தியோனிஸ் தம்பு- றோசப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும் மங்களநாயகி (திருகோணமலை), அருட்சகோதரி புருடென்சியா (A.C.) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற குணசீலி, வின்சி (கனடா), கொன்சீலி (பத்தாவத்தை), பிறேமசீலி (கனடா), ஒக்சீலி (கனடா), பாலசீலி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான ஞானரெட்ணம் மாக்கிறேட், அரசரட்ணம் மற்றும் தர்மரட்ணம் (லண்டன்), விஜயரட்ணம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் பீற்றர் ஜெயராசா, கலா (கனடா), தவரட்ணராசா, சந்திரசேகர் (கனடா), ஜெயராசசிங்கம் (கனடா), திருமாளவன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமியும் ஜெயகிறிஸ்ரோ, ஜெயமரினோ, ஜெரோஜினி, ஜெயநேரியோ, சிந்தியா, அஜந்தியா, அபிஷேக், சுஜிகரன், சசிக்கா, றதிகரன், ஷெகான், டியக்ஷனா, அக்ஷனா, மதுமிதா, சுமிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வணபிதா பீற்றர் துரைரெட்ணம் (பங் குத்தந்தை - அச்சுவேலி), அருட்சகோதரி பரமேஸ்வரி (A.C. மட்டக்களப்பு ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் வன்கூவர், கனடாவில் 21.06.2008 சனிக்கிழமை இடம்பெறும். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பத்தாவத்தை புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் நாளை (20.06.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இரங்கற் திருப்பலி இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கார்மல் கொன்வென்ற்,
யாழ்ப்பாணம். (75504)

தகவல்:
அருட்சகோதரி
புருடென்சியா (A.C.).

## இன்றைய ஆட்டங்கள்

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க அனுசரணையுடன் நடத்திவரும் தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் ,

மானிப்பாய் பெஸ்றோம் விளையாட்டுக்கழகமும் மயிலிட்டி இளைஞர் ஒன்றியமும் மோதுகின்றன.

(202-86)

* * *

வலி.வடக்கு, ஜூன்19

அமரர் சந்திரகுமாரின் 12ஆவது வருட ஞாப கார்த்தமாக அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்திவரும் ஏழு பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* அராலி மாவத்தை விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி.

* துணைவி சென்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் அராலி கலைவாணி விளையாட்டுக் ககழக 'ஏ' அணி.

(202-86)

## கண்ணீர் அஞ்சலி



சைவமும் தமிழும்
வளர்ச்சியடைய
தன்னையே
பூரணமாக
அர்ப்பணித்தஅன்னை
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களின் மறைவுக்கு எமது
கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து
அவரின் ஆத்மா சாந்திக்காப்
பிரார்த்திக்கின்றோம்.

அறங்காவலர் சபையினர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்,
சீரணி, சண்டிலிப்பாய்.

(ச/553403)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர்
நண்பர்களான
செ.பாஸ்கரன் (ஜெவா),
செ.வசந்தகுமார் (ஜீவா),
செ.கமல்ராஜ் (மேனா),
செ.மதனா, செ.ரமணா
ஆகியோரின் பாசமிகு தந்தை
தா.செல்வராஜ் அவர்களின் திடீர்
மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த
வேதனை அடைகின்றோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
சந்திரசேகரப் பிள்ளையாரைப்
பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.

(75497)

## சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்- சாவகச்சேரி
## பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

1. சம்பள அளவுத்திட்டம்: 11950-15300
155x10-180x10
(கூ.வே.ஆ.சுற்று நிருபம் 66/2006 இன்படி)
சம்பள குறியீட்டு இல :101/06 (சுற். நிரு. இல: 165/88 இன்படி)
2. வயது: 23 தொடக்கம் 45 வரை
(சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
3. விண்ணப்ப முடிவுத் திகதி: 03.07.2008
4. பிணைப்பணம்: உரொக்கம் 60000 ரூபா
ஆதனம் 50000 ரூபா
5.
1. சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. கணனி அறிவுத்திறனும் அவசியமாக இருத்தல் வேண்டும்.
3. மேலதிக விவரங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.
6. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
7. விண்ணப்பங்கள் "தலைவர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) கண்டி வீதி, சாவகச்சேரி." என்ற முகவரிக்கு பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
8. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 7 வது சம்பளத்திட்ட பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க பணியாளரின் 3வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் எட்டு (8) வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இவ் எட்டு வருட கால அனுபவத்தில் இரண்டு வருடங்களுக்குக் குறையாமல் சிரேஷ்ட முகாமை மட்டபதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரச் (உயர்தரம்) சான்றிதழ்/ க.பொ.த (உயர்தரம்) மூன்று (03) பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் பத்து (10) வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இப்பத்து வருடகால அனுபவத்தில் குறைந்தள வில் சிரேஷ்ட முகாமைமட்டப் பதவியில் இரண்டு(02) வருடகால அனுபவம்.

சாவகச்சேரி ப. நோ. கூ.சங்கம்,
கண்டி வீதி,
சாவகச்சேரி. (ச/553397)

தலைவர்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



சைவத் தமிழ் உலகிற்கு அளப்பரிய பணியாற்றி
வந்த முதுபெரும் மூதறிஞர் இறைபணியாளர்
அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களின் மறைவால் ஆழ்ந்த
துயரடைவதுடன், அம்மாவின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்போமாக.

கந்தசுவாமி தேவஸ்தானம், நீர்வேலி,
அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தானம்,
நீர்வேலி,
செல்லக்கதிர்காம சுவாமி தேவஸ்தானம்,
நீர்வேலி, (75496)

தேவஸ்தான
பிரதம
குருக்கள்.

## கலைஞர்களின் அஞ்சலி



கலைஞர்களை மதித்து,
அவர்களைக் கௌரவித்து,
அவர்களுக்கு ஆக்கமும்
ஊக்கமும் அளித்து வந்த
சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா
அப்பாக்குட்டியின்**
மறைவு கலைஞர்களுக்கு பேரிழப்பாகும்.
அவரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில். (ச/553407)

கலாபூஷணம்
நாதஸ்வர வித்துவான்
கே.ஆர்.சுந்தரமூர்த்தி.

## கண்ணீர் அஞ்சலி



சைவமும் தமிழ் மொழியும் வளர தன்னையே
அர்ப்பணித்த சிவத்தமிழ்ச் செல்வி
துர்க்கா துரந்தரி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அம்மையாரின் மறைவு சைவத்திற்கும்
தமிழுக்கும் ஈடு செய்ய முடியாத
பேரிழப்பாகும். எமது ஆலோசனைச்
சபையை ஆசீர்வதித்து மனமார வாழ்த்தியவராவார். அன்னாரின்
ஆத்மா சிவபதம் அடைய எம் பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.

பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவ
சுவாமி கோயில் ஆதீன கர்த்தா- ஆலோசனைச் சபை.

(75500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத, தேர்தல் வன்செயல்கள் காரணமாக

# பாதிப்படைந்த வீடுகள், கட்டடங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 19

பயங்கரவாத வன்செயல், அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் வன்செயல் ஆகிய காரணங்களால் பாதிப்படைந்த வீடு மற்றும் கட்டடங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

மீள்குடியேற்றம் மற்றும் அன்ர்த்த நிவாரண அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அமைச்சின் REP/SMIP/ H/2008/01 இலக்க சுற்றறிக்கைக்கு அமைய 1983 ஜூலை மாதம் 24 ஆம் திகதியிலிருந்து இன்றுவரை அடிக்கடி இடம்பெற்ற பயங்கரவாத வன்செயல், இனக்கலவரம், சிவில் கிளர்ச்சி நிலை மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலம் பாதிப்படைந்த வீடு மற்றும் கட்டடங்களுக்கும் -

1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம்பெற்ற தேர்தல் வன்செயல் காரணமாகப் பாதிப்படைந்த வீடுகளுக்குமே இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே உரிய பாதிப்புக்காக அரசினால் நஷ்டஈடு பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு அரச ஈட்டு முதலீட்டு வங்கி மூலம் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த புனர்வாழ்வு அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதே வேளை -

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இத்தகைய பாதிப்புக்குள்ளாகி ஏற்கனவே நஷ்டஈடு பெறாதவர்கள் அவ்வப் பகுதி சேவையாளர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202)

## நெடுந்தீவில் வீதிகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூன்19

நெடுந்தீவில் உள்ள வீதிகள் பலவும் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

நெடுந்தீவு பிரதான வீதி பல இடங்களிலும் சேதமடைந்துள்ளதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகிறார்கள்.

இவ் வீதியூடாக சென்று வரும் வாகனங்களும் இவ் வீதிச் சேதம் காரணமாக பழுதடைவதாகவும் வாகன ஓட்டுநர்கள் விசனம் தெரிவித்தனர். (202-300)

# கட்டாக்காலி நாய்களைக் பாதுகாக்க குடாநாட்டில் சரணாலயம் அவசியம்

வட மாகாண சுகாதார அதிகாரி ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன்19

குடாநாட்டில் பெருகிவரும் கட்டாக்காலி நாய்களைப் பாதுகாப்பதற்கென இங்கு சரணாலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என வடமாகாண சுகாதார அமைச்சின் நிர்வாக அதிகாரி பி.தயானந்தன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

கட்டாக்காலி நாய்கள் குடாநாட்டில் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

இதனால் பொது இடங்களிலும், சந்தை, மயானம், கொல்களங்கள் ஆகிய இடங்களிலும் நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றன.

இந் நிலையில் உள்ளூராட்சி சபைகள் இணைந்த வகையில் நாய்களின் சரணாலயம் அமைத்து செயற்பட்டால் நாய்களினால் ஏற்படும் அவலம் ஓரளவு குறைக்கப்படுவதுடன் அதற்கான சிகிச்சைகளையும் உடனுக்குடன் மேற் கொள்ளலாம்.

யாழ் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன. ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் கட்டாக்காலி நாய்கள் மகிந்த சிந்தனை பிரகாரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

எனவே நாய்களுக்கான சரணாலயம் அமைத்து செயற்படுவதன் ஊடாக சபைகள் வருமானம் உழைக்கும் அதேநேரம், மக்களையும் எதிர்கால உயிர் ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கலாம்- என்றார். (202-95)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# யாழ்.வலயப் பாடசாலைகளிலிருந்து இடை விலகிய மாணவர்களுக்குக் கல்வி

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து வறுமை, வேலைக்குச் செல்லுதல் போன்ற காரணங்களால் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கு மீண்டும் கல்வி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கென மேற்குறிப்பிட்ட மாணவர்களின் விவரங்கள் சேகரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இடை விலகிய மாணவர்களின் விவரங்களை கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாகத் திரட்டுவதற்கான படிவங்களை முறைசாராக் கல்விப்பிரிவினர் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சமர்ப்பிக்கப்பட்ட ஏழு படிவங்களையும் உரியமுறையில் தகவல்களுடன் பூரணப்படுத்தி அனுப்புமாறு யாழ்.வலயப் பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். கட்டாயக்கல்வி பெறும் வயதினர் அனைவருக்கும் கல்வி வழங்கப்பட வேண்டும் என யுனிசெவ் நிறுவனம் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (202-302)

# சேவாலங்கா நிறுவனம் 2075 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

சேவாலங்கா நிறுவனம் 2 ஆயிரத்து 75 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடு வழங்கும்செயற்றிட்டத்தைமுன்னெடுத்துவருகிறது.

உணவு விவசாய நிறுவனத்தின் எவ்.ஏ.ஓ. நிறுவனத்தின் அனுசரணையுடன் சேவாலங்கா நிறுவனம் விவசாயிகளுக்கு உள்ளீடு வழங்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலணை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, உடுவில் ஆகிய ஆறு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு விதை உள்ளீடுகளும் விவசாய தொழில்நுட்பப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாக உதவி நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சபேசன் தெரிவித்தார். இதற்கெனப் பயனாளிகள் தெரிவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பயறு, குரக்கன், கௌபி, நிலக்கடலை, மரக்கறி விதைகளுடன் இரசாயன உரம், கிருமிநாசினி மற்றும் விவசாய உபகரணங்களும் இலவசமாக வழங்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (203-302)

# நயினாதீவுத் திருவிழாவில் 'பொன்மலர்' வெளியீடு

நல்லூர், ஜூன்19

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருத்தேரின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'பொன்மலர்' நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவல் சபையால் வெளியிடப்பட்டது.

பொன்மலர் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் ஆ.தியாகு தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஜோய் மகாதேவாவிடமிருந்து வேலணை கோட்டக் கல்வி முன்னாள் அதிகாரி கோ.தில்லைநாதன் முதற் பிரதியையும் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவர் என்.பரமலிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (202-111)

# இலங்கையில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு சமாதானம் இங்கு மலர வேண்டியது அத்தியாவசியம்

## போரூட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கூறுகிறார்

வடமராட்சி, ஜூன் 19

இலங்கையில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு சமாதானம் மலர வேண்டியது அத்தியாவசியம்.



சமாதானம் இலங்கையில் தொடர்ந்திருக்க வேண்டும். சமாதானம் தொடர்ந்திருந்தால்தான் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்.

இவ்வாறு போரூட் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரொஜே ஹெக்னோர்ஸ் தெரிவித்தார்.

இன்பர்சிட்டியில் சுமார் 5.5 மில்லியன் ரூபா செலவில் சுனாமி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத் திறப்புவிழா மற்றும் வீடு கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இன்பர்சிட்டி சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ரி.சந்திரதாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்-

சுனாமிப் பேரலை அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு மூன்று தினங்களில் ஒஸ்லோ மாநகர மக்கள் ஒன்றுகூடி சுனாமியால் பாதிக்கப்பட்ட இன்பர்சிட்டி மக்களுக்கு உதவவேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.

அதனடிப்படையில் இக் கிராமத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக அந்த மாநகர மக்கள் பல வழிகளில் நிதிகளைச் சேகரித்து உதவினார்கள்.

இங்கு எனக்குப் போடப்பட்ட மலர் மாலைகள் யாவும் இன்பர்சிட்டி கிராம அபிவிரிருத்திக்கு போரூட் ஊடாக நிதி உதவிகள் புரிந்த நோர்வே மாநகர மக்களுக்கு போடப்பட்ட மாலைகளாக நான் உணர்கிறேன்.

பலமான அபிவிருத்தியைக் கட்டி எழுப்பும் சமூகத்தின் பிரதி நிதியாகவும், போரூட் நிறுவனத்தின் பிரதி நிதியாகவும் இருப்பதையிட்டு நான் மிகவும் பெருமையும் சந்தோஷமும் அடைகிறேன்.

யாழ்.மாவட்டத்தில் போரூட்டின் சுனாமி வேலைத்திட்டம்முடிவடைந்தாலும்வேலைத் திட்டங்களின் பங்காளர்களாக, நண்பர்களாக நாம் செயற்படுவது இனிமேலும் தொடரும்.

யாழ்.மாவட்டத்தில் நிறைய வேலைத் திட்டங்கள் செய்யவுள்ளோம். சமாதானம் இலங்கையில் தொடர்ந்தால்தான் இதனை முன்னெடுத்துச் செல்ல முடியும்- என்றார்.

சக்கோட்டையில் சுமார் 6.5 மில்லியன் செலவில் போரூட் நிறுவனத்தினால் சுனாமி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பொதுநோக்கு மண்டபத் திறப்பு விழா வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.எமிலியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (203- 236-70)

### வலி.கிழக்கு பிரதேசத்தின் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர்

அச்சுவேலி, ஜூன்19

வலி.கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டுப்பேரவை மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கவுள்ளது. இதற்காகத் தற்போது விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

நாடகம், நாட்டுக்கூத்து, தவில், நாதஸ்வரம், இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் சிறப்புற்று விளங்கும் கலைஞர்கள் ஜூலை மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள பண்பாட்டு பெருவிழாவில் வைத்துப் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைப் பிரதேச செயலக பண்பாட்டு பேரவைச் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு வலி.கிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் கேட்டுள்ளார். (202-11)




சுனாமியால் பாதிக்கப்பட்ட சக்கோட்டை இன்பர்சிட்டி கிராமங்களில் 'போரூட்' நிறுவனத்தால் அமைக்கபட்ட வீடுகள், நூல்நிலையம், பொதுமண்டங்கள் ஆகியன கையளிக்கப்பட்ட நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

'போரூட்' நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரொஜே ஹெக்னோர்ஸ் பொதுமண்டபத்தில் அமைக்கப்பட்ட 'போரூட்' பெயர் பலகையைத் திரைநீக்கம் செய்வதை முதலாவது படத்திலும் அரச அதிபர் கே.கணேஷ் இன்பர்சிட்டி பொது நூலகத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

சக்கோட்டையில் அமைக்கப்பட்ட பொதுமண்டபத்தை 'போரூட்' நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகளான திருமதி கஜானி ரணதுங்கா, ரொஜே ஹெக்னோர்ஸ் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் நாடா வெட்டித் திறந்து வைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் தள்ளுபடி விற்பனை

**SATS-TECH நிறுவனம்** யாழ். நகரில் இல.10/11, ஸ்ரான்லி வீதியில் (மிட்டாஸ் கடை சந்தி) விற்பனை நிலையத்தை இன்று (16.06.2008) திறந்து வைக்கிறது. இதனை முன்னிட்டு 30.06.2008 வரை தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுக விலையில்!

**DISH TV package I**
MAXI 3 மாதம் அல்லது
Freedomplus 6 மாதம்
இலவச பக்கேஜ்
ரூபாய் 8250/=

**package II**
MAXI 5 மாதம் அல்லது
Freedomplus 12 மாதம்
இலவசம் :-
ரூபாய் 10250/=

**package III**
MAXI 11 ½ மாதம் அல்லது
Freedomplus 18 மாத
இலவசத்துடன்
ரூபாய்13500/=



★ மற்றும் டிஷ் TV க்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்தித் தரப்படும்.
★ அனைத்து கேபிள் TV உபகரணங்களும் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும்.

இல. 10/11, ஸ்ரான்லி வீதி,
[மிட்டாஸ் கடைச் சந்தி],
யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களுக்கு:
**SATS-TECH ENGINEERS**

இல.182, கே.கே.எஸ்.வீதி,
குளப்பிட்டி சேச் அருகில், கொக்குவில்.
Phone :- 021- 222 5908


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
02.05.1923

உதிர்வு:
21.05.2008

## அமரர் வேலுப்பிள்ளை சிவசம்பு

முடிந்துவிட்டன முப்பத்தியொரு நாள்கள்
முத்தான புன்னகை தவழும் உங்கள்
முகம் காணா விடியல்கள்....
யுகம் பல சென்றாலும் உங்கள் நினைவு
முடியாமல் எம்மோடு தொடரும்....

மனோன்மணியம்மா - சிவசம்பு
சடாட்சரமூர்த்தி - சசி
பத்மநாதன் - கலைச்செல்வி
குணசிங்கம் - வாணி

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 01.07.1939
உதிர்வு: 20.05.2008

அமரர்
**இராசையா முருகேசு**
(ஓய்வு பெற்ற R.D.D.சாரதி)

## 47 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 19.09.1941
உதிர்வு: 04.05.2008

திருமதி
**முருகேசு கமலாதேவி**

எமது தெய்வங்கள் நோயுற்றபோது அவர்களை பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள், மேலதிக சிகிச்சைக்கு கொழும்புக்கு கொண்டுசெல்ல உதவிய யாழ்.மாவட்ட அரச அதிபர், கொழும்பில் மேலதிக சிகிச்சை அளித்த கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவல வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் ஊழியர்களுக்கும் மற்றும் மரணச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசியிலும் எமது பிரிவுத் துயரைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தெரிந்தும் தெரியாமலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*எங்கள் தெய்வங்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியங்களும் கொழும்பில் நடைபெறுகின்றன.*

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*ஆத்தியடி வீதி, கச்சாய் றோட்,*
*கொடிகாமம்.*

## நெடுந்தீவு வைத்தியசாலையில் பெரும் எண்ணிக்கையானோர் சிகிச்சை பெருகின்றனர்

குருநகர், ஜூன் 19

நெடுந்தீவு பிரிவு வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் நாளாந்தம் 55 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றார்கள்.

இங்குள்ள மகப்பேற்று விடுதி, சவச்சாலை ஆகியவற்றின் மின் இணைப்புக்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக உயிரியல் வைத்திய தொழில்நுட்ப பிரிவினரால் அண்மையில் திருத்தியமைக்கப்பட்டது.

இலங்கை மின்சாரசபையினால் வழங்கப்படும் மின்சாரம் தடைப்படும் நேரங்களில் மின்சாரத்தை வழங்க 5 கே.வி.வலுவுள்ள ஜெனரேட்டர் ஒன்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் அண்மையில் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(203-51)

## சட்டவிரோத மின்பாவனையாளர் கண்டுபிடிக்கப்பட்டு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தினர் கடந்த வாரம் சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பகுதியில் திடீர் பரிசோதனை நடத்தி சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களை கண்டுபிடித்தனர்.

சட்டவிரோத மின்சாரம் பெற்றவர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றினர்.

அலுவலக மின் அத்தியட்சகர் அன்ரன் ஞானப்பிரகாசம் தலைமையில் சென்ற மின்சார சபை அலுவலர்கள் திடீர் பரிசோதனை நடத்தினர்.

மின்சார சபை அலுவலகத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றமைக்காக மன்னிப்புக் கோரியதையடுத்து உபகரணங்களை பறிமுதல் செய்து அபராதம் விதித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-207)

## ஒன்றுகூடல்

நாவற்குளி, ஜூன்19

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான ஒன்றுகூடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட சமூக சேவை அலுவலர் ஆ. ஞானவேல் தெரிவித்தார்.

(203-288)


சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
பதிவு இலக்கம்: ஜே/1582 பதிவுத் திகதி: 01.03.1972

# பதவி வெற்றிடம்

01. பதவி: கணக்குப் பதிவாளர்
02. குறியீட்டு இலக்கம்: 301/13
03. சம்பள அளவுத் திட்டம்: 9,950 - 11,700
85x10 90x10
04. பதவி எண்ணிக்கை: 01
05. கல்வித் தகைமை: கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் *அல்லது* கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் பதவியில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவம்

*அல்லது*

க.பொ.த (சா/தரம்) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/ தூயகணிதம்/ வர்த்தக கணிதம், சிங்களம் அல்லது தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கியதாக ஐந்து திறமைச் சித்திகளுடன் மொத்தம் ஆறு பாடங்களுடன் கூட்டுவுச் சங்கம் ஒன்றில் இலிகிதர் பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
06. வயது: விண்ணப்ப முடிவுதிகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர் தாங்கள் கடமை புரியும் கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
07. சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
08. சங்கம் கோரும் பிணைப்பணத்தை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்தவேண்டும்.
09. கணனி தொடர்புடைய அடிப்படை அறிவு விரும்பத்தக்கது.
10. **விண்ணப்ப முடிவு திகதி: 10.07.2008**

விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
*பொதுமுகாமையாளர், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்* எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல்வேண்டும்.
விண்ணப்பக் கடித உறையின் மேல் பக்க இடது மூலையில் கணக்குப் பதிவாளர் குறியீட்டு இல. 301/13 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.


# 5 ஆம் ஆண்டு நினைவுச் சுடர்



மலர்வு: 17.02.1974

உதிர்வு: 14.07.2003

## அமரர் தவராசா புவனேஸ்வரன்

*திதி: பிரதமை 19.06.2008*

உன்னோடு வாழ்ந்த நாம்
உன் நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள், குடும்பத்தினர்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
10
★
03
★
1945



மறைவு
20
★
05
★
2008

அமரர்
## வன்னியசிங்கம் பரமேஸ்வரி

கடந்த 20.05.2008 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரர் வன்னியசிங்கம் பரமேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.06.2008) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

நந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சி

*சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.*

* பின்வரும் உரைப்பகுதியை வாசித்து இல. 1-11 வரையிலுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.

தேயிலைச் செடிகளுக்கிடையே பாம்பு போல நெழிந்து செல்லும் ஒற்றையடிப் பாதையிலே நான் நடக்கின்றேன். வளவள என்று கதைத்தபடி கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்கள் என்னைக் கண்டதும், அமைதியாகி அவசர அவசரமாகக் கொழுந்து கிள்ளத் தொடங்கினர். செம்மண் நிலத்தில் செழிப்பாக வளர்ந்திருந்த தேயிலைச் செடிகளில் புத்தம் புதிய கொழுந்துகள் பள பள என்று மின்னின. அந்தக் கொழுந்துகளின் மீது பெண்களின் கைகள் நாட்டியமாடும் அழகை ரசித்தபடி நான் அப்பால் செல்கிறேன். தோட்டத்தின் மறுபுறமாக சில தொழிலாளிகள் வளர்ந்து உயரும் தேயிலைச் செடிகளை வெட்டி ''கவ்வாத்து'' செய்து கொண்டிருந்தனர்.

1. இவ்வினாக்களைக் கூறுபவர் யாராக இருக்கலாம்? (சரியான விடையின் கீழ் கோடிடுக.)
   1. தோட்டத்தொழிலாளி 2. தோட்டமேலதிகாரி 3. உல்லாசப்பிரயாணி
2. பெண்கள் என்ன வேலை செய்துகொண்டிருந்தனர்? ..........................
3. ஒற்றையடிப்பாதை எதைப் போன்றிருந்தது? ..............................
4. பெண்களின் கைகள் எதிலே நாட்டியமாடின?..........................
5. தேயிலைச் செடிகளை வளராமல் குட்டையாக வெட்டும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?...........................
6. பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்கு மொழிச் சொல் யாது? .....................
7. எழுவாய் அடைமொழிச் சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக ......................................
8. பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து எழுதுக..................................
9. பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொற்களைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக?
   1. தெருவிலே............... 2. அரும்பு.................
10. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துக்களை எழுதுக?
    1. செழிப்பாக............. 2. தொழிலாளி....................
11. பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
    1. தேயிலை..................... 2. புதிய........................

* *பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.*

12. வீதிச்சமிஞ்ஞை விளக்குகளில் 'ஆயத்தமாகு' கட்டளையைப் பிறப்பிக்கும் நிறம் மஞ்சள் ஆகும். ( )
13. மின்னஞ்சல் என்பது மிக விரைவாக செய்திகளைப் பரிமாறிக் கொள்ளக்கூடிய ஒரு தொலைத்தொடர்பு சாதனமாகும். ( )
14. உடலுக்குச் சக்தியைப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் போதியளவு மாப்பொருள் கொண்ட உணவுகளை உட்கொள்ள வேண்டும் ( )
15. வயிற்றில் ஏற்படும் கோளாறுகளுக்கு இஞ்சிச்சாறு பிழிந்து அருந்தக் கொடுப்பது கைமருந்தாகும் ( )
16. துத்திரி விதை காற்றினால் எடுத்துச் செல்லப்பட்டு பரவலடையக் கூடியது ( )
17. பேய் ஓணான் என்ற பெயருடைய நகருயிர் இலங்கை நாட்டுக்கு மட்டுமே உரித்தானதாகும் ( )
18. ஒரு வட்டத்தின் கால்பங்கிலும் கூடுதலானதும் அரைப் பங்கிலும் குறைவானதும் ஆன கோணம் விரிகோணம் எனப்படும். ( )
19. இலங்கையிலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் கொழும்பிலிருந்து நேரடியாக புகையிரத வழியாகச் செல்லலாம். ( )
20. தர்ம சக்கரம் என்பது பௌத்த மதத்துடன் தொடர்பான ஒரு சின்னமாகும் ( )

21. *சில வகைத் தொழில்களுக்காகத் தொழிலாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் அல்லது கருவிகள் சில கட்டமிட்டுத் தரப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள விபரங்களுக்கேற்ற வகையில் அவற்றைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடத்தில் எழுதுக.*

நங்கூரம், மடி, அத்தாங்கு, அங்குசம், மட்டப்பலகை, வனைசில்லு, தூக்குக்குண்டு, தீதாள், தூண்டில், துலா, டைனமோ

1. பெரிய யானையை அடக்குவதற்காக யானைப்பாகர்களால் பயன்படுத்தப்படும்
   ..........................................................
2. குடை ஒன்றைக் கையால் தைக்கும் போது ஊசியினால் கைவிரலுக்குச் சேதம் ஏற்படாதிருக்க விரலுக்கு அணியப்படுவது
   ..........................................................
3. மின்சாரம் இல்லாமல் வேறு பொருள்களைக் கொண்டு மின்னை உற்பத்தி செய்வதற்கு உதவுவது
   ..........................................................
4. ஆழமான கிணறுகளில் இருந்து நீரை இறைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கிராமிய முறை
   ..........................................................
5. கட்டடங்களில் மட்டம் பார்ப்பதற்குக் கொத்தனார்கள் உபயோகிப்பது
   ..........................................................

22. பின்வரும் சொற்றொடர்களினால் கூறப்படும் கருத்தைச் தனிச்சொல்லில் எழுதுக.

1. காட்டுக்குள் அலைந்து மிருகங்களை அம்பெய்திக் கொல்லுதல்
   ..........................................................
2. துறைமுகங்களில் கப்பல்களை நிறுத்தி வைப்பதற்காக கடலில் இடப்படுவது.........
3. உயரத்தில் குறைந்த மனிதன்...........

23. பிழையின்றி எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. அறிவுறை, அரிவுரை, அறிவுரை, அரிவுறை
2. மற்றுமன்றி, மட்றுமன்றி, மட்டுமன்ரி, மட்டுமன்றி

24. பகீரதி தமிழ் மகாவித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களிற்கு இலவச நூல் விநியோகிப்பதற்காக ஒரு வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதற்காக தரம் *1 முதல் 5 வரையிலான மாணவர்களின் விபரம் தொடர்பான அட்டவணை பின்வருமாறு:*


| தரம் | வகுப்புகளின் எண்ணிக்கை | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 5 | 208 |
| 2 | 4 | 148 |
| 3 | 5 | 225 |
| 4 | 5 | 172 |
| 5 | 4 | 180 |

1. பாடசாலையில் 3ஆம், 5ஆம் தரங்களிலிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
   ..........................................................
2. 2ஆம் தரத்தில் உள்ள எல்லா வகுப்புகளிலும் சமமான எண்ணிக்கையில் மாணவர்கள் இருக்கின்றனர் எனின், ஒரு வகுப்பில் இருக்கக் கூடிய மாணவர்கள் எத்தனை பேர்?
   ..........................................................
3. 5 ஆம் தர மாணவர்களுக்கு 6 புத்தகம் வீதம் கொடுப்பதற்கு 10 புத்தகங்கள் கொண்ட எத்தனை பைக்கற்றுக்கள் அவசியப்படும்?
   ..........................................................
4. மேற்படி பாடசாலையில் தரம் 1தொடக்கம் 5 வரையிலான வகுப்புகளுக்கு எத்தனை வகுப்பாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்?
   ..........................................................
5. இலவச நூல் விநியோக வைபவம் மு.ப 10.30 மணிக்கு ஆரம்பமாகி, 3 மணித்தியாலமும் 25 நிமிடங்களும் நடைபெற்றது எனின், வைபவம் நடைபெற்று முடிந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக
   ..........................................................

* பாடசாலையிலுள்ள தரம் 4 மாணவர்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு வகுப்பாசிரியர்களால் முன்வைக்கப்பட்டது.


| வகுப்பு | 4A | 4B | 4C | 4D | 4E |
|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 33 | 35 | .... | 34 | 36 |

6. 4C வகுப்பில் இருக்க வேண்டிய மாணவர்கள் எத்தனை பேர்?..........................
7. தரம் 4 வகுப்புகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை பின்வரும் வரைபில் நிழற்றிக் காட்டுக.




* மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.

25. நீருக்குள் முற்றாக அமிழ்ந்து வளரக்கூடிய தாவரம் எது?
    1. ஐதரில்லா 2. அல்லி 3. சல்வீனியா 4. தாமரை
26. வருடத்தில் வெவ்வேறு காலங்களில் வேகமாக விலைகளில் மாற்றம் ஏற்படக் கூடிய உணவுப் பொருள் எது?
    1. அரிசி 2. வாழைப்பழம் 3. மரக்கறி 4. தேங்காயெண்ணெய்
27. உருவில் காட்டப்பட்டுள்ள சாய்தளங்களில் மிகவும் சுலபமாக வேலையைச் செய்து கொள்ளக் கூடிய சாய்தளம் எது?




28. யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பு வகை யாது?
    1. ஈசிபீஸ்ஈஜிப்ட்ஸ் 2. அனோபிலிஸ்
    3. கியூலெக்ஸ் 4.ஈடிஸ்எல்பொபிக்டிஸ்ச
29. லீப் வருடம் என்பது எத்தனை நாள்களைக் கொண்டது?
    1. 365 நாள்களைக் கொண்டது 2. 360 நாள்களைக் கொண்டது
    4. 366 நாள்களைக் கொண்டது 4. 3651/4 நாள்களைக் கொண்டது
30. இலங்கைக்கு புத்த சமயத்தைக் கொண்டு வந்தவர் யார்?
    1. புத்தபெருமான் 2. மகிந்ததேரர்
    3. சங்கமித்தா பிக்குணி 4. தேவநம்பியதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
யாழ்ப்பாணம் வண்ணை வடக்கு வண்ணார்பண்ணை

## கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக பூர்த்தி விழா

நவகுண்ட சகஸ்ர கலச சங்காபிஷேகம்

காலம்: நாளை (20.06.2008) வெள்ளிக்கிழமை
காலை 6 மணிமுதல்

சங்காபிஷேக பிரதம குரு:
சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீ ரங்கநாதக் குருக்கள்
( தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயம்)

யாவரும் கலந்து அருள்பெறுக.

பரிபாலன சபையினர்.

எழில்மிகு தென்மராட்சி நகர் பகுதியில்.....

அனைத்து கணினி பிரியர்களினதும், SCOT கணினி நிறுவனத்தின் வாடிக்கையாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டும்........

- கணினி விற்பனை
- கணினி உதிரிப்பாக விற்பனை
- கணினி பழுதுபார்த்தல்
- மென் பொருள் வடிவமைப்பு
- இணையத்தள பக்க வடிவமைப்பு
- கணினி கற்றல் செயற்பாடுகள்
- Printing & Scanning
- CD Writing
- Software CDs & Games CDs

SCOT UPGRADE YOUR LIFE

போன்ற இதர சேவைகளை யாழ்.நகர, கொழும்பு விலைகளில் உத்தரவாதத்துடன் நியாயமான முறையில் வழங்கவுள்ளோம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

- SCOT கணினி நிர்வாகம் -

SCOT Computer Sales & Repair Centre
கண்டி வீதி, சாவகச்சேரி T.P:- 0776701394

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### முருகன் தர்மலிங்கம்

பிறப்பு 28.11.1959 இறப்பு 01.07.2007

திதி: 19.06.2008

ஆலம் விழுதுகள் போல்
உறவுகள் ஆயிரம்
இருந்தும் என்ன அப்பா
வேரென நீர் இருந்தீர்கள்
அன்பால் எமைக் காத்து ஆசையால் எம்மை வளர்த்து
அவனியில் நாம் உயர வழிகாட்டி நின்றவரே ஆண்டுகள்
ஒன்று சென்றாலும் ஆறாதப்பா எம் இதயம்

முனிஸ்லேன்,
கோப்பாய்தெற்கு, கோப்பாய். தகவல் குடும்பத்தினர்.

(75480)

## கண்ணீர் அஞ்சலி



சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
சைவமும் தமிழும் வளர தன்னையே
அர்ப்பணித்த சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
அம்மையாருக்கு எமது கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்.

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலய
கல்விச் சமூகம்.

(75487)

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலி



துர்க்கா துரந்தரி
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் மறைவு கேட்டு ஆறாத் துயர்
அடைவதுடன் அன்னையினது ஆத்மா
சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை
வேண்டி நிற்கின்றோம்

பணிப்பாளரும், ஊழியர்களும்,
கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை.

(சி/553

## கண்ணீர் அஞ்சலி



சைவத்திற்கும், தமிழுக்கும்
சமூகத்திற்கும் தன்னை முழுமையாக
அர்ப்பணித்த
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
துர்க்கை அம்மன் அடி பணிந்து
பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(சி/33389)

வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு

வளர்ப்பு மீன்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: "திருப்பதி"
மெமோரியல் லேன், மானிப்பாய்.

(73477)

## தவறிவிட்டது

கந்தையா சூரியகுமாரி என்பவருடைய தே.அ. அட்டை(456811396V), விசேட அ... (09020 28711), இராணுவ பதிவு(வீட்டில்), சிறிய குறிப்பேடு என்பன 16.06.2008அன்று யாழ்ப்பாணத்திற்கும் இணுவிலுக்குமிடையில் மினி பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: அசோகா ஜுவலர்ஸ்,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (73491)

விற்பனைக்கு

1 1/2 வயதுடைய ஜேமன் சப்பட்
நாய் ஆணும், பெண்ணும் உடன்
விற்பனைக்கு.
ரஞ்சன்,
52 யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 9243 (75494)

## கணனி வன்பொருள் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.கல்வி வலயத்தால் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு கணனி வன்பொருள் தொடர்பான மூன்று மாத பயிற்சியை ஆரம்பித்து நடத்தி வருகிறது.

நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். வலய முறைசாராக் கல்விப் நல்லூர், செட்டித்தெருவில் உள்ள சிறுவர் மகிழ் வகத்தில் இந்த பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகின்றது. 40 மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று வருகின்றனர்.

(202-302)

## உடுவில் கோட்ட பொது அறிவுப் போட்டி முடிவுகள்

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் பவளவிழாவை யொட்டி பவளவிழாச் சபையினரால் உடுவில் கல்விக் கோட்டப்பாடசாலைகளுக்கு இடையே தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

ஞா.கிரிபவன் (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி) பா. விதுஷன் (மல்லாகம் கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை) வ.குகன் (தாவடி இந்துதமிழ்கலவன் பாடசாலை).

ஆறுதல் பரிசுகள் பெற்றுள்ளோர் விவரம்:

உ. கோபிகா (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), ப. நிலக்சன் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), ம.மதுஷா (சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை), வி. பிரணவன் (ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), சி. திவாஹரி (இணுவில் மத்திய கல்லூரி)

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் பவள விழாநிகழ்வில் வழங்கப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் பி.கணேஸ்வரலிங்கம் தெரிவித்தார்.

(202-66)

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அருணகிரிநாத சுவாமி விழா - 2008

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்: நாளை (20.06.2008) வெள்ளிக்கிழமை
நேரம்: மு.ப.10.30 மணி

சிறப்புச் சொற்பொழிவு: 'ஆறுமுகமான பொருள்'
வழங்குபவர்: திரு.ஆ.சிவநாதன்
(அதிபர்,வல்வை சிவகுரு வித்தியாசாலை)
விசேட நிகழ்வு: திருப்புகழிசை
வாராந்த நிகழ்வு வரிசையில் -
விரிவுரையாளர்
அ.குமாரவேல்
அவர்களின் பெரியபுராணம் எனும் தொடர் பற்றிய
சொற்பொழிவும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு. சந்நிதியான் ஆச்சிரமம்.

## கண்ணீர் அஞ்சலி



சைவமும் தமிழும் வளர தன் முழுவாழ்வையும்
அர்ப்பணித்து அமரத்துவமடைந்த
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி
அம்மையாருக்கு எமது கண்ணீரைக்
காணிக்கையாக்குகிறோம்.
ஹரிகணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும் பல்கட்டுமிடமும்
564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல.91,கே.கே.எஸ்.வீதி, கோக்குவில் சந்தி, கோக்குவில்.
இல. 86, கே.கே.எஸ்.வீதி, கன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி



15.06.2008 அன்று அமரராகிய
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி (J.P)
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த துயருறுகின்றது. அன்னை சைவமும் தமிழும் ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்ற உழைத்த உத்தமி. எமது கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு எந்த விழாவாயினும் ஆசியுரை வழங்கி அவ்விழா சிறக்க என்றும் துணையாக நின்ற எமது அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வேண்டுவதோடு அவரின் பிரிவுத் துயரால் ஆழ்ந்த துயரத்தில் உள்ள குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. பாடசாலைச் சமூகம்.

இந்தியாவில் படியுங்கள்

பிருந்தாவன் கல்லூரி

AICTEஇன் அனுமதியும் அரசுகளின் அங்கீகாரமும் பெற்றது.
மற்றும் பங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.
NAAC ஆல் 'A' தரத்தில் மதிப்பளிக்கப்பட்டது
Email : info@brindavancollege.com
enquiry@brindavancollege.com
Website : www.brindavancollege.com

இலவச கருத்தரங்கு மற்றும் உடனடி அனுமதி - கொழும்பில்

| இடம் | திகதி | நேரம் |
| --- | --- | --- |
| கொழும்பு ஹில்டன் | 21.06.2008 | மு.ப. 10.00 |

உயர் தரத்தில் 2 சித்திகள்

பட்டப்படிப்பு பாடநெறிகள்
* B.Sc. - COMPUTER SCIENCE, Physics, Maths
* B.Sc. - COMPUTER SCIENCE, Statistics, Maths
* B.Sc. - MICROBIOLOGY, Chemistry, Zoology
* B.Sc. - BIOTECHNOLOGY, Chemistry, Zoology
* B.Sc. - GENETICS, Biochemistry, Microbiology
* B.C.A - Bachelor of Computer Applications
* B.B.M - Bachelor of Business Management
* B.Com - Bachelor of Commerce

பட்டப்பின் படிப்பு பாடநெறிகள்
* M.Sc. - Biotechnology
* M.Sc. - Microbiology
* M.Sc. - Applied Genetics
* MBA Master of Business Administration
* MCA Master of Computer Applications

பல்கலைக்கழகத்துக்கு முந்திய பாடநெறிகள் (A தரத்துக்குச் சமம்)
விஞ்ஞானம்: PCMCs/PCMB/PCBHs வர்த்தகம்: BACS

250இற்கும் அதிகமான இலங்கை மாணவர்களுடன் பயில்தல்.
சுமார் 600 இலங்கை மாணவர்கள் இக்கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றுள்ளனர்.
இலங்கை பல்கலை மானியக் குழுவால் பட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
ஒதுக்கீடு/பதிவுக்கட்டணம் US $100 (அல்லது சமமான தொகை) கருத்தரங்கின்போது இணையும் மாணவர்களுக்கு


Building of Brindavan College of Engg., Dwarakanagar, Bagalur Main Road, Yelahanka, Bangalore - 63. Email : info@brindavancollege.com


Brindavan College of MBA/MCA, Dwarakanagar, Bagalur Main Road, Yelahanka, Bangalore - 63. Email : info@brindavancollege.com


Brindavan College of UG & PG, Vinayaka Layout, Bhoopasandra, RMV 2nd Stage, Bangalore - 94. Email : info@brindavancollege.com

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு:
#28EC, 1/1 Stanley Tillakaratne Mw., Nugegoda. Tel : 011-4580270 / 0777-317043
இன்றே இணைந்தால் ஒரு வருடத்தை மிச்சம் பிடிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றும் தந்திரோபாயம் தொடர்கின்றது

"சர்வதேசப் பிரசாரப் போரில் தோற்றுவிட்டோம்."

அண்மையில் லண்டனுக்கு விஜயம் செய்திருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இலங்கையில் தமது அரசும் படைகளும் ஏதோ நல்ல காரியங்களை ஆற்றுவன போலவும், ஆனால் சர்வதேச மட்டத்தில் தமிழர்களின் பிரசாரப் பீரங்கிகள் தமது அரசின் நல்ல செயற்பாடுகளை எல்லாம் மூடிமறைத்துத் துவம்சம் செய்து விட்டன என்பது போலவும் அர்த்தப்படுத்தும் விதத்தில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருக்கலாம்.

ஆனால், களத்தில் கேடு பண்ணிக்கொண்டு, வெறும் பிரசாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு சர்வதேசத்தையும் ஏமாற்றி நல்ல பெயர் சம்பாதிக்கலாம் என்ற தென்னிலங்கையின் எதிர்பார்ப்பில் இப்போது இடிவிழுந்திருப்பதைப் பிரதிபலிப்பதே அவரது இந்தக் கருத்து என்பதுதான் உள்ளார்ந்தம்.

தமது அரசின் அராஜகங்களுக்கு எதிராக சர்வதேசத்திலும், உள்ளூர் மட்டங்களிலும் கருத்து நிலைப்பாடு வலுவாக ஏற்படும்போது அதனைச் சமாளிப்பதற்குத் தாம் அவ்வப்போது மேற்கொள்ளும் வெறும் தந்திரோபாய நடிப்பு நகர்வுகளும், எத்தனங்களும், அவற்றுக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் உள்நோக்கங்களின் கருத்தும் சர்வதேசத்துக்கும் வெட்ட வெளிச்சமாகி வருவதால் சர்வதேச அதிருப்தியையும், விசனத்தையும், எரிச்சலையும் சம்பாதித்து வருகிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அந்தப் பின்னடைவுகளை 'சர்வதேசப் பிரசாரத் தோல்வி' என்ற காரணத்தின்கீழ் மூடிமறைக்க - அல்லது அந்தக் காரணத்தைக் காட்டிச் சமாளிக்க - விழைகிறார் அவர்.

அரசினதும், அதன் படைகளினதும் மிகமோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் அராஜகச் செயற்பாடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் எல்லை மீறி வரும் இச்சந்தர்ப்பத்தில் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குக் காத்திரமான - பயனுள்ள - ஆக்கபூர்வமான - நடவடிக்கைகளை வெளிப்படையாக எடுத்து, நல்லதோர் ஆட்சியாகத் தமது அரசுக் கட்டமைப்பைக் காட்டுவதை விடுத்து -

அவற்றை மூடி மறைத்து, சமாளித்து, சர்வதேசத்துக்கும் 'அல்வா' கொடுக்கும் செயற்பாட்டை ஆட்சித் தலைமை தொடருமானால் எவ்வளவு காலத்துக்குத்தான் சர்வதேச சமூகம் ஏமாளியாகப் பார்த்து ஏமாந்து கொண்டிருக்கும்?

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நூற்றுக் கணக்கான ஆள்கள் கடத்தப்படுகின்றார்கள். இப்படிக் கடத்தப்படுவோர் நகரில் பரவலாக - நெருக்கமாக - அமைக்கப்பட்டிருக்கும் படையினரின் தடை நிலைகள், சோதனைச் சாவடிகள், காவல் நிலையங்கள் போன்றவற்றை எல்லாம் தாண்டிக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் நிரந்தரமாகவே காணாமற் போய்விடுகின்றார்கள். கடத்தப்படும் பலர் பணயமாக வைக்கப்பட்டு பெரும் தொகைப் பணம் கப்பமாக வசூலிக்கப்படுகின்றது. சட்டத்துக்கு முரணான மரணதண்டனை விதிப்புகளும், ஆட்கொலைகளும் சாதாரணமாகி விட்டன.

இவற்றுக்கு மூலகாரணமான இடம் எது என்பது இலங்கை ஜனாதிபதிக்குத் தெரியாததல்ல. இப்பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு எங்கு விரைந்து திருத்தம் செய்யப்படவேண்டும் என்பதும் அவர் அறியாததல்ல.

ஆனால், அதைவிடுத்து, ஆள்கள் கடத்துப்படுவது, காணாமற் போவது பற்றிய விடயங்களைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கான அமைப்பு என்ற பெயரில் அமைச்சர்கள் மட்டக்குழு ஒன்றை - பயனற்ற கட்டமைப்பு ஒன்றை - உருவாக்கிச் சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றினார் ஜனாதிபதி.

இப்போது ஊடகங்களுக்கும் ஊடகவியலாளருக்கும் எதிராக அரச அடக்குமுறை கட்டவிழ்ந்திருக்கின்றது. சர்வதேசத்தின் அதிக கவனத்தையும், சிரத்தையையும் அது இப்போது ஈர்த்துள்ளது.

இந்த அடக்குமுறையின் மூலம் எது, சிருஷ்டிகர்த்தா யார் என்பவை எல்லாம் இந்த நாட்டின் சிறுபிள்ளைக்கும் கூடத் தெரியும். அது ஜனாதிபதிக்குத் தெரியாததல்ல. அங்கு விடயத்தைக் கையாண்டு சீர் செய்ய விரும்பாத - அத்தகைய சீர்கேட்டுக்கு தாமே தூண்டுதலாளி என்ற காரணத்தினாலோ என்னவோ - இது விடயத்திலும் சர்வதேசத்திற்கு காது குத்த முயல்கிறார் அவர்.

ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள விவகாரத்தைக் கையாண்டு நிலைமையைச் சமாளிப்பதற்காக இதற்கும் அமைச்சர்கள் கொண்ட உப குழு ஒன்றை நியமித்திருக்கின்றார் அவர்.

தனக்கு நெருக்கமான இடத்திலிருந்து உருவாகும் அராஜகங்களை - ஜனநாயக அத்துமீறல்களை - ஆட்சி அதிகார அட்டகாசங்களை - தடுத்து நிறுத்த வக்கில்லாத, துப்பில்லாத, விருப்பில்லாத ஆட்சித் தலைமை, அமைச்சரவை உபகுழுக்களை நியமித்து சர்வதேச கருத்து நிலைப்பாட்டைத் தொடர்ந்து சமாளிக்கலாம் என்று கருதினால் அதில் ஏமாறவேண்டித்தான் இருக்கும். 'சர்வதேசப் பிரசாரத்தில் தோற்றுவிட்டோம்!' -என்று புலம்பும் நிலைமையைத் தான் அது ஏற்படுத்தும்.

குற்றச்செயல்களின் சட்டப் பொறுப்பிலிருந்து விலக்களிக்கும் விசேட சிறப்புரிமைக் கலாசாரத்தை படைத்தரப்புக்கு வழங்கி, பெரும் அராஜகங்களும், மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களும் அரங்கேற வாய்ப்பளித்துள்ள ஆட்சித் தலைமை, படைத்தரப்பின் கொடூரங்களுக்கு யாரையும் பொறுப்பாக்கவில்லை, குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தித் தண்டிக்க முயற்சிக்கவே இல்லை, இத்தகைய குற்றங்களினால் பாதிக்கப்பட்டோரையும், அவைபற்றிய முக்கிய சாட்சிகளையும் பாதுகாக்க உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை - என்றெல்லாம் சர்வதேச மட்டத்திலிருந்து குற்றச்சாட்டுக் கணைகள் குவிந்து வருகின்றன.

இவற்றைச் சமாளித்து ஏமாற்றுவதற்காக இவ்வளவு காலம் கழித்து ஆறுதலாக இப்போது சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலத்தை அரசு கொண்டு வந்திருக்கின்றது.

ஆனால் அப்படி சாட்சிகள் உட்பட முக்கிய தரப்பினரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் அச்சட்டத்தின் கீழ் சுதந்திரமாக இயங்கும் தரப்புகளிடம் ஒப்படைக்கப்படவேயில்லை என்றும், இது ஒரு பயனற்ற ஏமாற்று எத்தனம் என்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தெரிவித்திருக்கின்றது.

யாழ். மாவட்ட எம்.பியான என்.ஸ்ரீகாந்த சுட்டிக்காட்டியமை போன்று, இதுவும் கூட சர்வதேச சமூகத்தை ஏமாற்றுகின்ற மற்றொரு எத்தனம்தான்.

எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!... இந்த நாட்டிலே...

# தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டிய பொறுப்பு, தேவையை சர்வதேசத்திற்கு உணர்த்துகின்ற நிகழ்வே 'பொங்கு தமிழ்'

## டென்மார்க்கில் ஜெயானந்தமூர்த்தி எம்.பி. பேச்சு

தமிழர்கள் தமிழீழத்தை எப் போதோ பெற்றுவிட்டார்கள். அந்நாட்டை அங்கீகரிக்கவேண்டிய பொறுப்பும் தேவையும் சர்வதேச சமூகத்திற்கு உள்ளது. இதனைச் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தும் வேண்டுகோளை விடுவதற்கான ஒன்றுகூடலே இந்த 'பொங்கு தமிழ்.'

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கில் ஒகுஸ் நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஈழத் தமிழர்களாகிய நாம் பரந்த மொழி, சிறந்த நிர்வாகம், சிறந்த படைப் பலம் என அனைத்தையும் கொண்டுள்ள தேசிய இனமாக இருக் கின்றோம். இவற்றையெல்லாம் முன் வைத்து எங்களுடைய நாட்டை அங்கீகரிக்கவேண்டும்என்ற கோரிக்கையைசர்வதேசத்திடம் முன்வைக் கின்றோம். அன்றி வேறு எதனையும் நாம் கேட்கவில்லை. எங்களிடம் பலம் உள்ளது. எவருக்கும் அஞ்சத் தேவையில்லை. சர்வதேசம் எங்கள் பலத்தை எந்தளவுக்குப் பார்க்கின் றதோ தெரியவில்லை. ஆனால், எமது பலத்தை பல தடவைகள் நாம் நிரூபித்துள்ளோம்.

'பொங்கு தமிழ்' நிகழ்வை நாங்கள் தாயகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும் ஆரம்பித்து அதன் மூலம் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமித்த குரலில் எமது கோரிக்கையை சர்வதேசத் திற்குப் பல தடவைகள் முன்வைத் துள் ளோம். சில நாடுகள் ஏற்றுக் கொண் டாலும் ஏற்றுக் கொள்ளாது போன்று நடித்தன.



ஆனால், தாயகத்தில் ஆரம்பித்த 'பொங்கு தமிழ்' இன்று சர்வதேச நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்றஅனைத்து உறவுகளினாலும் உணர்வு பூர்வமாக முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சர்வதேசத்திற்கு மிகத் தெளி வானசெய்தி ஒன்றைக் கூறுகின்றோம்.

இந்தச் செய்தியைச் சர்வதேசம் உணர்ந்துகொள்ள வேண்டும். எதற்காகத் தமிழர்கள் பொங்குகின்றார்கள், எதற்கு அனைவரும் ஒன்றுகூடியுள்ளார்கள் போன்ற விடயங்களை சர்வதேசம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

எமது நாட்டுப் பிரச்சினை பலருக்குத் தெரியாமல் இருக்கலாம் அல்லது புலம்பெயர்ந்த நாடுகளில் பிறந்து வளர்ந்த பிள்ளைகளுக்குத் தெரியாமல் இருக்கலாம். அவர்களுக்கு எமது நாட்டின் வரலாறுகளைக் கூறவேண்டும். அத்துடன் அந்நாட்டு பிரஜைகளுக்கும் நாங்கள் எதற்காகப் போராடுகின்றோம், அதன் முக்கியத்துவம் என்ன என்பது பற்றிய விளக்கங்களைப் பரப்ப வேண்டும். அதன்மூலமே அவர்களின் மனங்களை வென்றெடுப்பதனூடாக ஒத்துழைப்புக்களையும் பெறமுடியும். அது மாத்திரமல்ல இலங்கை அரசின் அப்பட்டமான பொய்ப்பிரசாரங்களை முறியடிக்க முடியும்.

மேலும், இதுபோன்று தொடர்ச்சியான ஒத்துழைப்பையும், இவ்வாறான நிகழ்ச்சிகளையும் நடத்துவதன் மூலம் இங்குள்ள மக்களைக் கவரவேண்டும். எனவே, எங்கள் இறுதி முடிவு தமிழீழத்தைப் பெறுவது. எமது மக்கள் சுய நிர்ணய உரிமைகளுடன் வாழ்வதும் அதுவும் எமது தேசியத் தலைவனின் காலத்தில் என்பதனை அனைவரும் உணர்ந்து ஓரணியில் திரளவேண்டும் - என்றார். (சி)

### நில அளவைத் திணைக்கள

## படவரைஞருக்கான போட்டிப் பரீட்சையை யாழ். நகரில் நடத்த அரச அதிபர் பரிந்துரை

யாழ்ப்பாணம், ஜூன் 19

நில அளவைத் திணைக்களத்தின் பதிவுசெய்யப்பட்ட படவரைஞருக்கான போட்டிப் பரீட்சையினை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு பரிந்துரை செய்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.கணேஷ் நில அளவை திணைக்கள நாயகத்துக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

கொழும்பில் இப்பரீட்சைகள் நடைபெறுவதற்கென அறிவிக்கப் பட்டுள்ள அதே திகதிகளில் அப்பரீட்சையினை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கேட்டுள்ள அரசாங்க அதிபர் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் 5 பரீட்சார்த்திகள் அனுப்பியுள்ள 5-6-2008 திகதியிட்ட கடிதத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடக்கும் பரீட்சைக்குத் தோற்ற முடியாதிருப்பதாகத் தெரிவித்துள்ள இப்பரீட்சார்த்திகள் விமானத்தில் செல்வதென்றால் 9500 ரூபாயும் கப்பலில் செல்வதென்றால் 7000 ரூபாயும் செலவு செய்ய வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர். கொழும்பில் தங்கும் விடுதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதிலும் கஷ்டமிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமையில் அவர்களின் கோரிக்கை நியாயமானதாக இருப்பதால் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தி உதவுமாறு அரசாங்க அதிபர் நிலஅளவையாளர் நாயகத்தைக் கேட்டுள்ளார். (ப)

# இலங்கை வங்கியின் கடனாளிகள் பட்டியலை நாடாளுமன்றில் வெளியிட அரசு பின்னடிப்பு!

### ஜே.வி.பியினரின் கடும் சீற்றம்

கொழும்பு, ஜூன் 19

இலங்கை வங்கியில் 1996 முதல் 2006 வரையிலான காலப்பகுதியில் பல கோடி ரூபாவைக் கடனாகப் பெற்று அத் தொகையை இன்னும் செலுத்தாமல் உள்ளவர்களின் பெயர், விவரங்களை உடனடியாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு செவ்வாயன்று நாடாளுமன்றில் வேண்டுகோள்விடுத்தது.

ஆனால், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் அந்த விவரங்களை சபையில் வெளியிட முடியாது என்று அரசு தெரிவித்து விட்டது.

இதனால் ஜே.வி.பியினருக்கும் அரச தரப்பினருக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

1996 முதல் 2006 வரை இலங்கை வங்கியால் வழங்கப்பட்ட கடன் தொகை யையும் கடன் பெற்று அதைச் செலுத் தாதவர்களின் விவரங்களையும் சபை யில் வெளியிடுமாறு சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா விடம் ஜே.வி.பியின் எம்.பியான ஆர்.பி.ரணவீர பத்திரன வேண்டு கோள் விடுத்திருந்தார்.

சபை முதல்வர் மொத்தக் கடன் தொகையை சபையில் அறிவித்த போதிலும்கடன்பெற்றவர்களின்பெயர்விவரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

இந்த இரகசியங்கள் வங்கிகளுக்கிடையே பரிமாறப்படுகின்றபோது அவை சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதில் என்ன தவறு இருக்கின்றது என்று ஜே.வி.பியினர் கேள்வி எழுப்பினர்.

சட்டமா அதிபரின் உத்தரவை நாங்கள் மதிக்கும் அதேவேளை, சட்டமா அதிபரை விட நாடாளுமன் றம் உயர்வானது என்பதையும், இந்த விவரங்களை அறியும் உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு என்பதையும் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றனர் ஜே.வி.பியினர்.

தப்புச் செய்தவர்களின் விவரங்களை நாடாளுமன்றில் வெளியிட எதற்கு நீதிமன்ற உத்தரவு என்று கேள்வி எழுப்பிய ஜே.வி.பியினர், இவர்களின் விவரங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டே ஆகவேண்டும் என்றனர்.

அவ்வாறு வெளியிட முடியாது என்று சபை முதல்வர் உறுதியாகக் கூறியதால் இருதரப்புகளுக்குமிடையில் கடும் வாக்குவாதம் நீடித்தது. (சி)

## ஜே.வி.பியின் அன்ஜான் உம்மா எம்.பி. சபையில் தனித்து இயங்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 19

ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அன்ஜான் உம்மா இனித் தாம் நாடாளுமன்றில் தனித்து இயங் கப் போகின்றார் எனத் தெரிவித்துள்ளார்.

செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் இந்த விடயம் குறித்து தெரிவித்த அவர், தனது இந்தத் தீர்மானம் குறித்து ஜே.வி.பியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தமக்கு இடையூறு விளைவிக்க முற்படுகின்றார் என்ற முறைப்பாடொன்றையும் நாடாளுமன்றப் பொலிஸாரிடம் முன்வைத்துள்ளார் என இணையத்தளத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 06 | 20.06.2008<br>வெள்ளிக்கிழமை |
| திதி: | துதியை<br>பி.இ 02.40 வரை |
| நட்சத்திரம் : | பூராடம்<br>மு.இ 06.38 வரை |
| [illegible] : | 05.54 - 07.24 |
| ராகுகாலம் : | 10.24 - 11.54 |

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 19

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று காலை விசேட அபிஷேக பூஜை, வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறும். (202-224)

* * *

வலி.வடக்கு, ஜூன் 19

மல்லாகம் கோணப்புலம் ஞான வைரவர் ஆலய 30 ஆவது ஆண்டு பொங்கல் விழா நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம் பெறவுள்ளன. (202-86)

* * *

நவாலி, ஜூன் 19

சுதுமலைதெற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய நூதன கும்ப தேவசபை விமான மணிக்கோபுர மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக் கிழமை முற்பகல் 10.05 மணி முதல் இடம் பெறவுள்ளது. (202-100)

* * *

நாவற்குளி, ஜூன் 19

கைதடி இயத்தை அண்ணமார் ஆலயத்தின் மகேஸ்வர பூசை விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (202-288)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 19

வரணி வடக்கு அரசு நின்றபுலம் பெரியதம்பிரான் ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

108 சங்காபிஷேகம், மகேஸ்வர பூசை என்பனவும் இடம்பெறும். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வள நிலையத்தின் முதலாவது அணியினருக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்.ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள நிலையத்தின் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், முன்னாள் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

சான்றிதழ் பெறும் பயிற்சியாளர்களையும் ஏனைய பயிற்சியாளர்களையும் இரண்டாவது படத்தில் காணலாம்.

மூத்த பத்திரிகையாளரும் பயிற்சியாளருமான எஸ்.தில்லைநாதனுக்கு துணைவேந்தர் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதை மூன்றாவது படத்தில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

## புதிய பிரிவுகள் ஆரம்பம்
## aat (SriLanka)

**Foundation Level, Intermediate Level & Final**
**Medium: English & Tamil**

**Minimum Qualification For Registrstion**
1. Six passes G.C.E. O/L Examination OR
2. Two passes at G.C.E. A/L Examination

Batch I: Sat & Sun 8.00am - 12.00pm
Batch II: Sat & Sun 12.00pm - 4.00pm
Batch III: Tue, Wed & Thursday 1.00pm - 4.00pm

குறிப்பிட்ட அளவு விண்ணப்பப் படிவங்களே கையிருப்பில் உள்ளதால் உங்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளவும்.
A/L 2008 மாணவர்களுக்கான விசேட பிரிவு பரீட்சையின் பின் ஆரம்பிக்கப்படும். பதிவுகளை தற்போது மேற்கொண்டு இருத்தல்வேண்டும்.
விரிவுரைகள் ஆரம்பம்: 21.06.2008 (சனி)

Further Details:
Director
**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road (Near Commercial Bank), Jaffna.
(சி/553400)

## கண்ணீர் அஞ்சலி



*மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனக் கொண்டு சைவ மதத் தொண்டினூடாகத் தமிழ்ச் சமூகத் தொண்டை முன்னெடுத்து வெற்றிகண்ட*
*சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி*
**தங்கம்மா அப்பாக்குட்டி**
*அவர்களது இழப்பினால் துயருறும் உரும்பிராய் - ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும் உரும்பிராய் வாழ் மக்களும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அருளுமாறு வேண்டி ஒடையம்பதி கற்பக விநாயகர் பாதம் பணிகிறோம்.*

ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினர்.
உரும்பிராய்.
(சி/553409)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

994

வெற்றி இலக்கங்கள்

**24 41 46 48**

கும்பம்

**17-06-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 4866695 - 4882163
ஜக்பொட் பரிசு ரூபா.2,499,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 342,178 | 10/- | 3,421,780/- |
| 2 இலக்கங்கள் | 31,388 | 20/- | 627,760/- |
| 1 இல. + லக்கினம் | 31,107 | 30/- | 933,210/- |
| 2 இல. + லக்கினம் | 2,911 | 100/- | 291,100/- |
| 3 இலக்கங்கள் | 838 | 500/- | 419,000/- |
| 3 இல. + லக்கினம் | 74 | 5,000/- | 370,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,499,000/- | - |
| மொத்தம் | | | 6,562,850/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 408,506 | | 7,062,850/- |

**இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,263,050/-**

தொடர் இல. 5768379 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூன் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 4869992-1-75 |
| கம்பஹா | 4869745-8-89 |
| பொலன்னறுவை | 4871568-9-90 |
| மாத்தறை | 4868083-6-37 |
| கம்பஹா | 4867117-4-04 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## விபத்துகளில் மூவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துகளில் மூவர் காயமடைந்தனர்.

இச்சம்பவங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

சாவகச்சேரி, கச்சாய் வீதி, தபாற்கந்தோர் வீதி ஆகிய இடங்களில் வீதியின் குறுக்கே ஓடிய நாய்களுடன் மோதியதில் ந.நந்தகுமார் (வயது18), ஏ.கஜேந்திரன் (வயது24) ஆகியோரும் - வீதியோரமாக வைக்கப்பட்டிருந்த சுருள் கம்பியில் மோட்டார் சைக்கிள் தூக்கி வீசப்பட்டதில் சங்கத்தானையைச் சேர்ந்த ரி.பிரசன்னா (வயது 21) என்பவரும் - காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (202-207)

## உயர் நீதிமன்றில் ஜே.வி.பி. மனு

கொழும்பு,ஜூன்19

வடமத்திய மாகாணசபை மற்றும் சப்ரகமுவ மாகாணசபை கலைக்கப்பட்டமையை ஆட்சேபித்து ஜே.வி.பி. சார்பில் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்தச் சபைகளில் அங்கம் வகித்த ஜே.வி.பியின் உறுப்பினர்களான முறையே ஆர்.கே.இந்திரானந்த மற்றும் கமால்நந்தசேன பிரேமரத்ன ஆகியோர் சார்பில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இரு மனுக்களிலும் மேற்படி சபைகளின் ஆளுநர்கள் உட்பட எண்மர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சபைகள் கலைக்கப்பட்டமைக்கு எதிராக உடனடியாக இடைக்காலத் தடை உத்தரவு விடுக்குமாறும், சபை கலைக்கப்பட்டமை தவறானது என உத்தரவிடுமாறும் மனுக்களில் கோரப்பட்டுள்ளது. (சி)



69.00 விருந்து

## விற்பனைக்குண்டு

மலிவு விலையில் ஆர்மோனியம், தபேலா.
1. புதிய ஆர்மோனியம் - 12,500/=
2. புதிய தபேலா - 7,500/=
3. புதிய தபேலா (பெரிது) - 9,000/=

தொடர்புகளுக்கு: அருளகம், அடியபாதம் வீதி, திருநெல்வேலி [பலாலி ஆசிரியர் கலாசாலை முன்பாக].
T.P.: 0777 286220, 060 2216222
(75493)

## தவறிவிட்டது

மானிப்பாய் மேற்கு, மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த நிசானி யேசுநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (888212787V), விசேட அடையாள அட்டையும் மானிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

## கலைமதி விளையாட்டுக் கழகம்

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகம்
நடத்தும் மாபெரும் 9 பேர் கொண்ட
**உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி**
*இடம்: கலைமதி விளையாட்டுக் கழக மைதானம்*
*காலம்: 20.06.2008 வெள்ளிக்கிழமை 3.30 மணிக்கு*

1ஆம் பரிசு: 20,000 ரூபாவும் வெற்றிக்கேடயமும்
2ஆம் பரிசு: 15,000 ரூபாவும் வெற்றிக்கேடயமும்
3ஆம் பரிசு: 10,000 ரூபாவும் வெற்றிக்கேடயமும்
4ஆம் பரிசு: 5,000 ரூபாவும் வெற்றிக்கேடயமும்

மேலும் பல பெறுமதிமிக்க தனிப்பட்ட பரிசில்களும் வழங்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமதி வி.க., புத்தூர் மேற்கு, புத்தூர்.
(75505)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 20.05.2008 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்
**அமரர் கனகசபை துரைசிங்கம்**
(முன்னாள் முகாமி (போமன்) இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

தோற்றம் 17.12.1927 — மறைவு 20.05.2008

அமரர் கனகசபை துரைசிங்கம் அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (19.06.2008) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (75492)

**குடும்பத்தினர்.**

## Special Promotion .......

### HP Note Book (Lap Top)

Processor Intel Core 2 Duo 2.16Ghz
Screen 15"4' WXGATFT Display
HDD HP 120GB
Video GMA950 224MB : WIFI 802.11A-G
RAM 1GB DDR11
HP DVD R/W Double Layer
LapTop Bag
One Year International Warranty
89,000/=

**Pentium 4 Computer** — 37,000/=
Intel Celeron 1.6 Ghz Processor
MSI DDR11 945 Mother Board
Kingston 512MB Ram
Sata 80GB Hard Disk
Samsung 15" CRT Flat Monitor
ATX Casing
Samsung DVD R/W
PS2 Keyboard & Mouse

**Pentium 4 Computer** — 49,500/=
Intel Pentium 3.0Ghz Processor
Asus P5GC - MX1333 Mother Board
Kingston DDR11 512MB Ram
Sata 80GB Hard Disk
Samsung /Digimax 17" CRT Flat Monitor
ATX Casing
Samsung DVD Combo
Power Tree 650W UPS
PS2 Keyboards & Mouse

**Pentium 4 Computer** — 51,000/=
Intel Pentium 2.0Ghz Dual Core Processor
Asus P5GC - MX1333 Mother Board
Kingston DDR11 1GB Ram
Sata 160GB Hard Disk
15" View Sonic / Samsung Monitor
ATX Casing
Sony DVD R/W
Power Tree 650W UPS
PS2 Keyboard & Mouse
Duest Cover

**Pentium 4 Computer** — 59,000/=
Intel Pentium 3.0Ghz Processor
GigaByte 945 intel / Foxconn Mother Board
Sata 160GB Hard Disk
Kingston DDR11 1GB Ram
15" LCD Monitor
ATX Casing
Asus / HP DVD R/W
Power Tree 650W UPS
USB Keyboard & Optical Mouse
MultiMedia Speaker & Mouse Pad

**Pentium 4 Computer** — 66,500/=
Intel Pentium 2.2Ghz Dual Core Processor
Intel 945GCNL Original Mother Board
Sata 160GB Hard Disk
Kingston DDR11 1GB Ram
17" View Sonic Wide Screen LCD Monitor
ATX Handle Casing
Sony DVD R/W
Power Tree 650W UPS
USB Keyboard & Optical Mouse
Mouse Pad

**Pentium 4 Computer** — 78,500/=
Intel Pentium 2.4Ghz Core 2 Duo Processor
Intel 945GCNL Oringinal Mother Boards
Kingston DDR11 2GB Ram (1GB+1GB)
Sata 250GB Hard Disk
19" ViewSonic/Samsung LCD Monitor
ATX Casing
Asus / HP DVD R/W
Power Tree 650W UPS
MultiMedia Keyboard & Optical Mouse
Dust Cover

One Year Warranty Three Year Service
**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபாற்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554.
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யூரோ கிண்ணக் கால்பந்தாட்டம்

# பிரான்ஸ் வெளியேற்றம்; காலிறுதியில் இத்தாலி

சூரிச், ஜூன் 19

யூரோக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி வாய்ப்பை பிரான்ஸ் அணி இழந்து தொடரிலிருந்து வெளியேறியது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற தனது கடைசி லீக் போட்டியில் இத்தாலியிடம் 0-2 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியமையைத் தொடர்ந்து காலிறுதி வாய்ப்பை பிரான்ஸ் அணி இழந்தது.

பிரான்ஸ் அணி தான் விளையாடிய மூன்று லீக் போட்டிகளில் ஒன்றில்கூட வெற்றியை ருசிக்கவில்லை. ருமேனியாவுக்கு எதிரான லீக் போட்டியைச் சமனிலையில் முடித்திருந்தது. நெதர்லாந்து அணியிடம் 1-4 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியிருந்தது.

சுவிற்ஸர்லாந்தின் சூரிச் நகரில் நடைபெற்ற 'சி' பிரிவுக்கான லீக் ஆட்டத்தில் உலகக் கிண்ணப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற இத்தாலி அணியும், அத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பிடித்த பிரான்ஸ் அணியும் பலப்பரீட்சையில் ஈடுபட்டன. இந்த ஆட்டத்தில் வென்றால் காலிறுதிக் குத் தகுதிபெறலாம் என்ற நிலையில் இரு அணிகளும் மல்லுக்கட்டின.

தொடக்கத்திலிருந்தே இரு அணி வீரர்களும் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். 25ஆவது நிமிடத்தில் இத்தாலிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை அந்ரே பிர்லா கோலாக்கி, அணிக்கு முன்னிலை பெற்றுக்கொடுத்தார்.

இத்தாலி முன்கள வீரர் லூகா டோனியை 'பவுல்' செய்தமைக்காக இந்தப் பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. 'பவுல்' செய்தமைக்காக பிரான்ஸ் வீரர் எரிக் அபிடால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால், ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்திலிருந்து பிரான்ஸ் 10 வீரர்களுடன் விளையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

முதல் பாதியில் பதில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை. இதன் காரணமாக முதல் பாதி ஆட்டம் இத்தாலியின் 1-0 என்ற முன்னிலையுடன் நிறைவுபெற்றது.

இரண்டாவது பாதியிலும் இத்தாலி வீரர்கள் துடிப்பாக விளையாடினர். ஆட்டத்தின் 62ஆவது நிமிடத்தில் இத்தாலி 2ஆவது கோலைப் பெற்றது. 'பிறி கிக்' மூலம் கிடைத்த வாய்ப்பைக் கோலக்கினார் டானிலி டீ றோஸி.

இறுதிவரை பிரான்ஸ் அணியால் ஒரு கோல் கூட அடிக்கமுடியவில்லை. இத்தாலி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றது. இந்தத் தோல்வியால் பிரான்ஸ் அணி தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது.

பிரான்ஸ் அணி 1984, 2000ஆம் ஆண்டுகளில் யூரோ கிண்ணத்தை வென்றிருந்தது. முன்னாள் சம்பியனான அந்த அணி காலிறுதிக்குக் கூடத் தகுதி பெறமால் போனமையால் அணியின் ரசிகர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணியை இத்தாலி அணி எதிர்கொள்கின்றது.

## நெதர்லாந்து அணி அபார ஆட்டம்



பேர்ன், ஜூன் 19

நடைபெற்றுவரும் யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் அனைத்து லீக் போட்டிகளிலும் வென்ற சாதனையை குரோஷியாவுடன் நெதர்லாந்து அணியும் பகிர்ந்துகொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சுவிற்ஸர்லாந்தின் தலைநகரான பேர்னில் நடந்த 'சி' பிரிவுக்கான லீக் ஆட்டத்தில் ருமேனிய அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியதன் மூலம் இந்தச் சாதனையை நெதர்லாந்து பதிவுசெய்தது.

ஏற்கனவே காலிறுதிக்குத் தகுதிபெற்றுவிட்ட நெதர்லாந்து அணி, காலிறுதிக்குத் தகுதிபெற வேண்டும் என்றால் கட்டாய வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ருமேனியாவை எதிர்கொண்டது.

ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் அபாரமாக ஆடினர். கோல் காப்பாளர்களின் சிறப்பான தடுப்பாட்டத்தால் பல முயற்சிகள் தடுக்கப்பட்டன. முதல் பாதி ஆட்டம் கோல் அடிக்கப்படாமல் கழிந்தது.

இரண்டாவது பாதியில் நெதர்லாந்து வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆட்டத்தின் 54ஆவது நிமிடத்தில் கிளாஸ் ஜான் ஹன்டலரும், 87ஆவது நிமிடத்தில் றொபின் வான் பெர்ஸியும் நெதர்லாந்து அணிக்காகக் கோல் அடித்துச் சிறப்பித்தனர்.

ருமேனிய அணியால் பதில் கோல் எதுவும் அடிக்கமுடியாமல் போக, நெதர்லாந்து அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியைச் சுவீகரித்தது. தனது மூன்று லீக் போட்டிகளிலும் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி 9 புள்ளிகளுடன் 'சி' பிரிவில் முதலிடம் பிடித்தது.

காலிறுதியில் நெதர்லாந்து அணி, சுவீடன் அல்லது ரஷ்யாவைச் சந்திக்கவுள்ளது. நேற்றிரவு நடைபெறவிருந்த லீக் ஆட்டமொன்றில் சுவீடன் - ரஷ்யா அணிகள் மோதவிருந்தன.

## ஐந்து மாத இடைவெளிக்குப் பின்னர் தொலைக்காட்சியில் தோன்றிய பிடல்

ஹவானா, ஜூன் 19

கியூபா முன்னாள் தலைவர் பிடல் கஸ்ட்ரோ, ஐந்து மாதங்களுக்குப் பின்னர் முதன் முறையாக, அந்நாட்டு அரச தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினம் தோன்றினார்.

ஹவானாவில் திங்கட்கிழமை நடைபெற்ற சந்திப்பு நிகழ்வு ஒன்றே அதில் காட்டப்பட்டது. பிடல் கஸ்ட்ரோ, அவரது இளைய சகோதரரும் கியூபா ஜனாதிபதியுமான ரவூல் கஸ்ட்ரோ, வெனிசூலா ஜனாதிபதி ஹூகோ சாவேஸ் ஆகியோர் இதில் பங்கு பற்றியிருந்தனர்.

இது ஒலியில்லா நாடாவாகும். இது குறித்து சாவேஸ், செய்தியாளர்களுக்குத் தகவல் வெளியிடுகையில், உணவு, சக்தி வளநெருக்கடிகள் குறித்துத் தாம் கலந்துரையாடினர் எனத் தெரிவித்துக் கொண்டார்.

"இச் சந்திப்பை நடத்திய பிடல் கஸ்ட்ரோ ஆரோக்கியமாக இருக்கிறார்; எழுதுகிறார். கியூபா மற்றும் எங்களின் முக்கிய விவகாரங்களுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழங்குகிறார்" என்றும் அவர் விவரித்தார்.

# முக்கிய நகர்களில் தலிபான்களைத் தேடி நேட்டோ, ஆப்கான் படைகள் வேட்டை

காபூல், ஜூன் 19

தென் ஆப்கானின் மிகப் பெரிய நகரமான அர்ஹன்டாப்பை அடுத்துள்ள தொடர்ச்சியான கிராமங்களுக்குள், நேற்றுப் புதன்கிழமை ஆப்கான், கனேடியப் படைகள் நுழைந்தன. இப் பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ள தலிபான்களை வேரோடு களைவதற்காக மேற்கொள்ளப்பட்ட அதிரடி இராணுவ நடவடிக்கை இதுவென அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

கூட்டுப் படைகள் மீது சிற் சில இடங்களில் தலிபான் போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதையடுத்து இரு தரப்புகளுக்குமிடையே துப்பாக்கிச் சமர்கள் இடம்பெற்றன. எனினும் சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை என நேட்டோப் பேச்சாளர் மார்க் லெய்ட்டி தெரிவித்தார்.

வான்வழி ரோந்து நடவடிக்கைகளில் ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. துப்பாக்கிச் சமர்கள் இடம் பெற்ற பகுதிகளிலிருந்து புகை மண்டலங்கள் கிளப்பியதை ஹெலிக் கொப்டெர்கள் அவதானித்துள்ளன. எனினும் துல்லியமான விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை என்றும் இப்பேச்சாளர் விவரித்தார்.

"இன்று (நேற்று) அதிகாலை, அர்ஹன்டாப்புக்குள் எமது இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரித்ததும், ஆப்கானிய தேசிய இராணுவத்துக்கு உறுதுணையாக கனேடியத் துருப்புகள் முழு வீச்சில் செயல்படு கின்றன. தலிபான் போராளிகளின் ஊடுரு வல்கள் முறியடிக்கப்பட்டு, அவர்கள் துடைத் தெறியப்பட்டு விடுவார்கள்" - என்றும் லெய்ட்டி நம்பிக்கை தெரிவித்தார்.

அர்ஹன்டாப் பிராந்தியத்தில் 300 இற்கும் 400 இற்கும் இடைப்பட்ட தலிபான் போராளிகளே செயல்படுகிறார்கள். இப்பிராந்தியத்தில் மாதுளம் பழத் தோட்டங்களும், முந்திரிகைத் தோட்டங்களும பெருவாரியாக உள்ளன. தலிபான்களின் கோட்டையென வர்ணிக்கப்படும் கந்தஹார் நகரின் வடமேற்கே 10 மைல் தொலைவில் இந்த இடம் அமைந்துள்ளது என ஆப்கான் பாதுகாப்பு அமைச்சு, செவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்தது.

## ஈராக்கின் பஸ்தரிப்பு நிலையமொன்றில் கோரம்; கார்க்குண்டுத் தாக்குதலில் 63 பேர் பலியாகினர்

பக்தாத், ஜூன் 19

ஈராக்கின் வட பக்தாத்தில், மக்கள் நடமாட்டமிகுந்த பஸ்தரிப்பு நிலையமொன்றை இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் சிக்கி 63 பேர் பரிதாபகரமாகப் பலியானார்கள்; 75 பேர் வரை காயமடைந்தனர். காயமுற்றோரில் அநேகர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸூக்காக பெருந்தொகையான பயணிகள் நேற்றுமுன்தினம் மாலை பஸ் தரிப்பில் காத்திருந்தார்கள். மக்கள் நடமாட்டமும் மிகுந்திருந்தது. அச் சமயத்தில் கார்க் குண்டொன்று பயங்கர ஓசையுடன் வெடித்தது. ஷியா முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஹரியாவை அடுத்து இவ்விடம் அமைந்துள்ளது என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

இக்குண்டுவெடிப்பால் சுமார் 30 அக்கம் பக்கக் கடைகள் மீது தீ பற்றிக் கொண்டது. ஒரு தொடர்மாடிக் கட்டடமும் தீக்கிரையானது. குண்டு வெடித்த பகுதியில் அவயவங்கள் சிதறிக் கிடந்தன. காயமடைந்தோரின் அபயக்குரல்களும், ஓலங்களும் நீடித்தன என பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

மதப் பிரிவினைவாத வன்முறைகளைத் தூண்டிவிடும் பொருட்டு போலியான ஷியாத் தீவிரவாதக் குழுவொன்றே இத்தாக்குதலை நடத்தியுள்ளது என அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது. இக் குழு ஆயுதங்கள், பயிற்சிகள், நிதி வசதிகள் ஆகியவற்றை அயல் நாடான ஈரானிலிருந்தே பெறுகின்றது என்றும் அமெரிக்கா சுட்டிக் காட்டியுள்ளது.

## பாகிஸ்தானுக்கு விரைவில் புதிய ஜனாதிபதி நியமனம்

### சர்தாரி கூறுகிறார்

லாகூர், ஜூன் 19

"ஜனாதிபதி முஷாரப்பின் நாள்கள் எண்ணப்படுகின்றன. விரைவில் அடுத்த ஜனாதிபதியை பாகிஸ்தான் மக்கள் கட்சி நியமிக்கும்." - என அந்தக் கட்சியின் தலைவர் ஆசிப் அலி சர்தாரி கூறியுள்ளார்.

லாகூரில், பாகிஸ்தான் மக்கள் கட்சி தொண்டர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் இரவு பேசிய சர்தாரி மேலும் கூறியவை வருமாறு:-

பஞ்சாப் மாகாண ஆளுநரான சல்மான் தசீர் போன்றவர்கள் ஜனாதிபதியாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை. 'பெனாஸிர் பூட்டோ வாழ்க' என்ற கோஷம், விரைவில் ஜனாதிபதி மாளிகையில் ஒலிக்கும். பாகிஸ்தானை உண்மையான ஜனநாயக நாடாக மாற்ற வேண்டும் என்பதில், நாங் கள் உறுதியாக உள்ளோம். உண்மையான ஜனநாயகத்தை கொண்டு வருவதன் மூலம், ஜனநாயக விரோத சக்திகளைப் பழிவாங்குவோம் - என்றார்.

## அன்னைக்குச் சிரம் தாழ்த்திய அஞ்சலிகள்



சிவத்தமிழ்ச் செல்வி

### தங்கம்மா அப்பாக்குட்டி

மாணவ, ஆசிரிய, சமூகங்களின் ஒளிவிழக்காக வியாபித்த அன்னைக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரிச் சமூகம் தனது அகம் நெகிழ்ந்த அஞ்சலியை மிகவும்பணிவோடுகாணிக்கையாக்கி, அன்னாரது ஆத்மா பேரின்பப் பெருவாழ்வு பெற வணங்கிப் பிரார்த்திக்கின்றது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி



சிவத்தமிழ்ச் செல்வி

### தங்கம்மா அப்பாக்குட்டி

சைவத்திற்கும் தமிழுக்கும் மானுடத்திற்கும் தாயென வாழ்ந்து அவற்றின் வளர்ச்சிக்காக எண்ணிலாத தொண்டுகள் பல செய்து மானுடத்தின் ஆரோக்கியத்திற்காக தன்னை அர்ப்பணித்து எம்மை பரிதவிக்க விட்டுப்பிரிந்த அன்னையின் ஆத்ம சாந்திக்காக நுணாவிற்குளம் கண்ணகை அம்மனை சரணடைந்து வேண்டுகின்றோம்.

பரிபாலன சபையினர்,
நுணாவிற்குளம் கண்ணகை அம்மன்
தேவஸ்தானம்.

## மரண அறிவித்தல்கள்

### குணசிங்கம் ஜனார்தன்



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.20, பிரம்படி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் ஜனார்தன் (மாணவன், கொக்குவில் இராமகிருஷ்ண. வித்தியாலயம்) 17.06.2008 அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று முற்பகல் 10மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20, பிரம்படி லேன்,*
*கொக்குவில்.* (75512)

தகவல்:
இ.குணசிங்கம்
(தந்தை).

### திருமதி வேலாயுதம் சுகுணாவதி



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் சுகுணாவதி நேற்று (18.06.2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதி வைரமுத்து - காலஞ்சென்ற பவளம் தம்பதியினரின் அன்பு மகளும் வல்லிபுரம் வேலாயுதம் அவர்களின் பாசமிகு மனைவியும், சுகிர்தினி(யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), அயலக்ஷன்(யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரசேகரம் (கிராம சேவையாளர்), குணநாயகம்(கனடா), வேதநாயகம் (கனடா), புனிதநாயகம்(கனடா), மோகனதாஸ் (கனடா), நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னரத்தினம் (மட்டுவில்), சேகர்(லண்டன்), ரஞ்சிதாதேவி, குகேஸ்வரி, திலகேஸ்வரி , சசிகலா, உமா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2008) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்துமயானத்திற்கு பி.ப. 2.30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரீவாகீஸ்வரி வீதி,*
*கோண்டாவில் வடக்கு.* (75513)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலரண் மீது கிரனேட் வீச்சு மன்னாரில் சிப்பாய் உயிரிழப்பு

மன்னார், ஜூன் 19

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதிகளுக்கு இடையில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு அருகில் இருக்கும் இராணுவக் காவலரண் மீது நேற்று அதிகாலை 2 மணியளவில் கொரில்லா அணி ஒன்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகாய மடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து காவலரணில் இருந்த மற்றைய இராணுவத்தினர் சுமார் 45 நிமிடங்கள் தொடர்ந்து பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்த இரு கான்ஸ்டபிள்களும் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு விரையப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டனர் என்றும் இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியதாகவும் கூறப்பட்டது. (சி)

# புலி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என 33 ஈழத் தமிழர்கள் இத்தாலியில் கைது!

கொழும்பு, ஜூன் 19

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இத்தாலியப் பொலிஸார் நேற்று முன்தினம் 33 இலங்கைத் தமிழர்களைக் கைதுசெய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இத்தாலியின் முக்கிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொடர் தேடுதல் நடவடிக்கையின் போது 28 பேர் கைதுசெய்யப்பட்டனர் எனத் தேடுதல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்த நேப்லனின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், அவர்களுக்கு நிதியுதவி வழங்கியவர்கள் எனக் கருதப்பட்டவர்களே கைதுசெய்யப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பலெர்மோ மற்றும் சிசிலி பகுதிகளில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளில் ஐந்து தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இத்தாலியின் தென்பகுதியிலுள்ள நேப்லஸ் முதல் வடபகுதியில் உள்ள பொலொக்னா வரை மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கைகளில் 200 பொலிஸார் ஈடுபடுத் தப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

## இராணுவத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் மேற்கொண்டார்.

பலாலியில் களமுனைத் தளபதிகளுடன் கலந்துரையாடி களநிலைவரம் குறித்து கேட்டறிந்தார்.

எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தல்களை கள முனைத்தளபதிகளுக்கு அவர் விடுத்தார். (1)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் இராணுவத்தினர் மூவர் உயிரிழந்தனர்.

அன்றையதினம் ஓமந்தைப் பகுதியில் இரவு 9.50 மணியளவில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவரும், முகாமில் பணியாற்றும் ஊழியர் ஒருவரும் உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பெரியமடுப் பகுதியில் செவ்வாயன்று பிற்பகல் 3.25 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் என்று படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## பொருளாதாரத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தூதுக்குழுவில் நெதர்லாந்து நாட்டின் மனித உரிமைக்கான தூதர் அர்ஜன் ஹம்பேகர், ஸ்பெயின் நாட்டு மனித உரிமைகளுக்கான தூதர் சில்பியா எஸ்ஹாபர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (சுவீடன் நாட்டின் மனித உரிமைக்கான தூதர் இன்று கொழும்பு வருகிறார்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் 3 மணிதொடக்கம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை ஐரோப்பிய ஒன்றிய மனித உரிமைகளுக்கான தூதர்களுடன் கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போதே தூதுக்குழுவினரிடம் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தூதுக்குழுவிடம் தாங்கள் வலியுறுத்திய விடயங்கள் குறித்து சுரேஷ் எம்.பி. 'உதயனு'க்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த இரண்டரை வருடகாலமாக இந்த நாட்டில் மனித உரிமை மீறல்கள் உச்ச கட்டத்தை அடைந்திருக்கின்றன. வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் வகைதொகையின்றி கடத்தப்பட்டுப் அச்சுறுத்தப்பட்டும் - கொலை செய்யப்பட்டும் வருகின்றனர். தமிழர்கள் என்றால் போதும், அவர்கள் காரணமெதுவுமின்றி அள்ளப்படுகின்றனர்.

### அப்பாவி பொதுமக்களை பலியெடுப்பு

தமிழர்கள் வாழும் பகுதிகளில் அரசின் விமானப்படையினர் குண்டு வீச்சை நடத்தி அப்பாவி மக்களைப் பலியெடுப்பதுடன், படையினரின் ஆழ ஊடுருவும் அணியினரும் தாக்குதல்களை நடத்தி தமிழ் மக்களைக் கொலை செய்கின்றனர். ஆனால் அரசதரப்பினரோ, விடுதலைப் புலிகளை இலக்குவைத்தே இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று கூறிவருகின்றனர். இப்படியான தாக்குதல்களால் இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து இதுவரை 67 தமிழ்ப் பொது மக்கள் உயிரிழந்திருப்பதுடன், 70 இற்கும் அதிகமானோர் காயமடைந்தும் இருக்கின்றனர்.

யுத்தத்தின் மூலம் பயங்கரவாதத்தை அடக்குவதாகக் கூறிக்கொண்டு அரசு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நாட்டில் அரசிற்கு எதிராகச் செயற்படுபவர்கள் தேசத்துரோகிகள் எனக் கணிப்பிடப்படுகின்றனர்.

இலங்கையில் மனித உரிமை தொடர்பான கண்காணிப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பில் ஐ.நா. விடுத்துவந்த கோரிக்கைகளை அரசு நிராகரித்து வந்தது. இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நாவோ அல்லது வேறு சர்வதேச அமைப்புகளோ தலையிட்டால் அவர்கள் வெள்ளைப்புலி என முத்திரை குத்தப்படுகின்றனர். அதேபோல், இலங்கை அரசின் தவறுகளை யாராவது சிங்களவர் சுட்டிக் காட்டினால் அவர்கள் சிங்களப்புலிகள் எனவும் முத்திரை பதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் அரசு யுத்தத்தை நடத்தி மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு வருகின்றது. இந்த மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் விடுத்துவந்த கோரிக்கைகளையும், வேண்டுகோள்களையும் அரசு நிராகரித்து வந்தது. இனியும் சர்வதேசத்தின் கோரிக்கைகளை அரசு கேட்கும் நிலையில் இல்லை.

எனவே, இலங்கை அரசு புரியக்கூடிய விதத்தில் இலங்கை மீது பொருளாதாரத் தடையை விதித்து ஜி.பி.எஸ்.பிளஸ் வரிச்சலுகையை ரத்துச் செய்வதன் மூலம், மனித உரிமை மீறல்கள் தொடர்பான தவறுகளிலிருந்து அரசு திருந்திக்கொள்ளும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு வழியேற்படுத்துங்கள் என்று வேண்டுகோள் விடுத்தோம் - என்றார் சுரேஷ்பிரேமச்சந்திரன்.

# கொழும்புக் குண்டுத் தாக்குதலுக்கும் மலேசியர் எவருக்கும் சம்பந்தமா?

## அந்த நாட்டு அமைச்சர் மறுக்கிறார்

கொழும்பு, ஜூன் 19

கொழும்பில் குண்டுத் தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு மலேசியர்கள் உதவினார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என மலேசிய உள்துறை அமைச்சர் டட்டுக் ஷேரி சையட் ஹமீட் அல்பர் தெரிவித்துள்ளார்.

வத்தளையில் அண்மையில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் குண்டுத்தாக்குதலை மேற்கொள்ளுமாறு மலேசியாவிலிருந்து கிடைக்கும் உத்தரவிற்காகத் தாம் காத்திருந்தனர் என்று கூறினர் என வெளியான தகவல் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் செய்தித்தாளொன்று இந்தத் தகவலை வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தி குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மலேசிய அமைச்சர், இவ்வாறான சதித்திட்டத்தில் ஈடுபட்ட மலேசியர்கள் யார் என்பது குறித்து அறிந்து கொள்வதற்காக மலேசிய அரசு இலங்கை யின் ஒத்துழைப்பை நாடியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றுவதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஏனெனில் மலேசியா சகல வகையான பயங்கரவாதத்தையும் எதிர்க்கின்றது. - என அவர் தெரிவித்துள்ளார்

இலங்கைத் தகவல் குறித்துத் தாம் ஆராய்ந்தார் எனவும், எனினும் மலேசியர்கள் எவரும் இதில் தொடர்புபட்டிருப் பதற்கான தடயங்கள் எவையும் இல்லை என்றும், விடுதலைப் புலிகளுக்கும் மலேசியர்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து எப்போதும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## பேச்சுக்குமுன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு யுத்தத்திலேயே ஈடுபட்டுள்ளனர். எமது தமிழ் மக்களின் துணையுடன் நாம் இந்த யுத்தத்தில் வெல்வோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

விடுதலைப் புலிகளை மரபு ரீதியான யுத்தத்தில் அரசினால் தோற்கடிக்க முடியாது - என்றார்.

'மரபுவழி இராணுவம் வெற்றி பெறத் தவறினால் அது தோற்கின்றது. விடுதலை இராணுவம் தோற்காவிட்டால் அது வெற்றி பெறுகின்றது' என்ற நெப்போலியனின் கூற்றையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவதற்கும் பேச்சுக்கான தெளிவான கால எல்லையை அறிவிப்பதற்கும் இணங்கினால்தான் பேச்சுக்குத் தயார் என அரசு கடந்த வாரம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

அதற்கே இப்போது அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ரொய்ட்டருக்கு வழங்கிய பேட்டியில் பதிலளித்திக்கிறார்.

## ஊரடங்கு வதந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுவதாக நேற்று முற்பகல் பரவிய வதந்தியை அடுத்து குடாநாட்டு மக்களிடையே ஒருவித பதற்றம் தொற்றிக்கொண்டது.

யாழ். குடாநாடு முழுவதும் நேற்றுப் பிற்பகல் 2 மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என நேற்று முற்பகல் பரவிய வ்தந்தியையடுத்துப் பலர் பதற்றமடைந்து அந்தத் தகவல் உண்மையா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கோடு பல தரப்பினருடனும் தொடர்பு கொள்ள முயன்றனர். பின்னர் அந்தத் தகவல் வதந்தி எனத் தெரியவந்ததை அடுத்து பதற்றம் ஓரளவு தணிந்தது.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையிலுள்ள துண்டி மயானப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் அப்பகுதியிலுள்ள மக்கள் பலர் தமது பாதுகாப்பைத் தேடி இடம்பெயர்ந்து சென்றனர். இதன் பின்னணியில் இந்த வதந்தி பரவியிருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. (சி)

## பாதுகாப்பு நிலைமை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் விடக் கரிசனைக்கு உரியது. அதில் விட்டுக் கொடுப்புக்கோ அல்லது சமரசம் மற்றும் சமாளிப்புக்கோ இடமில்லை. அதனால் தென்னிலங்கை நிலைமை குறித்து இந்தியா உற்று நோக்குகின்றது. திடீர்க் குண்டு வெடிப்புகளும் அதனால் ஏற்படும் சேதங்கள் மற்றும் அழிவுகள், அதிர்வுகள் தொடருமானால், 'சார்க்' மாநாட்டுக்காக இலங்கைக்கு இந்தியப் பிரதமர் விஜயம் செய்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

''நாம் எல்லா சாத்தியங்களுக்கும் இடமளித்துத் திறந்த மனதுடன் விவகாரங்களைக் கருத்தில் எடுக்கக் காத்திருக்கின்றோம்.'' - என்று இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றுவதற்காகக் கொழும்புக்கு வருமாறு கோரும் இலங்கையின் உத்தியோக பூர்வ அழைப்பை, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இவ்வார முற்பகுதியில் புதுடில்லியில் வைத்து இந்தியப் பிரதமரிடம் ஒப்படைத்திருக்கின்றார் என்றும் கூறப்பட்டது.

ஏனைய 'சார்க்' நாடுகளுக்கும் அவர் நேரடியாக விஜயம் செய்து இத்தகைய அழைப்புகளை அந்தந்த நாட்டுத் தலைவர்களிடம் வழங்கி வருகின்றார் என்றும் கூறப்பட்டது. (அ-உ)

# ஆனைக்கோட்டையில் சமுதாய நிகழ்வு

யாழ்ப்பாணம் ,ஜூன் 19

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை பொது நூலகம் நடத்தும் ''ஒரு புத்தகம்-ஒரு சமுதாயம்'' என்ற நிகழ்வு இன்று காலை 10மணிக்கு உப அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நூலகர் ம.வி.குணாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். மேற்படி நிகழ்வின் அறிமுகத்தை அலுவலகத்தின் பொறுப்பதிகாரி எஸ்.சந்திரமவுலியஸ் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வின் இம்மாத நிகழ்வாக ''மகுடம்'' பல்சுவை மாதாந்த சஞ்சிகையின் ஆய்வும் பாடசாலை மாணவர்கள், வாசகர்களுடன் மகுடம் சஞ்சிகையின் வளர்ச்சி பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன. (01)

## ஐ.நா.மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

.நேற்றுக் கொழும்பு வந்தடைந்த நெதர்லாந்து நாட்டின் மனித உரிமைகளுக்கான தூதுவர் அர்ஜன் ஹம் பேகர் மற்றும் ஸ்பெயின் நாட்டின் மனித உரிமைகளுக்கான தூதுவர் சில்பியா எஸ்ஹாபர் ஆகியோரை மனோகணேசன் எம்.பி. நேற்று மாலை 4 மணியளவில் கொழும்பில் உள்ள நெதர்லாந்துத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுமார் ஒருமணித்தியாலம் வரை நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்படி வேண்டுகோளை மனோ கணேசன் அவர்களிடம் விடுத்திருந்தார். அவர் அங்கு மேலும் எடுத்துக் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் மனித உரிமைகளை விட உயிர்வாழும் உரிமை முதலில் பாதுகாக்கப்பட வேண்டும். கொழும்பு மற்றும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வெள்ளைவானில் தமிழர்கள் கடத்தப்படுகின்றனர். அத்துடன், கொலை செய்யப்படுகின்றனர். இந்த மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தும் வகையில் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கை அரசினால் நிறுவப்பட்டிருக்கும் மனித உரிமைகளைக் கண்காணிக்கும் நிறுவனம் பெயரளவில் மாத்திரமே செயற்பட்டுவருகின்றது. இதனால், ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகம் கொழும்பு நகரில் ஸ்தாபிக்கப்பட்டு அதன்கிளை அலுவலகங்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் நிறுப்படவேண்டும். அதேபோல், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சியிலும் இந்த மனித உரிமைக் கிளை அலுவலகம் நிறுவப்படவேண்டும்.

இந்த அலுவலகங்கள் மூலமே அரச மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க முடியும்- இவ்வாறு கூறினார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.